விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 29 சனிக்கிழமை (11.04.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 113

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

# கடும் மழையிலும் ஷெல் வீச்சு அவலத்தில் வன்னி மக்கள்!

## நேற்று 292 பேர் பலி; 350 பேர் காயம்

(வவுனியா)

புதுக்குடியிருப்பு பகுதியில் கடுமையாக பெய்துவரும் மழைக்கும் மத்தியில் நேற்று நடத்திய எறிகணைத் தாக்குதலில் 292 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுடன் 350க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. கடும் மழை பெய்து வருவதால் கூடாரங்களில் உள்ள மக்கள் எவ்வித பாதுகாப்புமின்றி அவலத்தில் உள்ளதாக சுட்டிக் காட்டப்படுகிறது. *(12ஆம் பக்கம் பார்க்க)*

### மனிதாபிமானப் பிரச்சினை குறித்து

## ஐ.நா. செயலர் – ஜனாதிபதி தொலைபேசியில் உரையாடல்



(கொழும்பு)

வன்னிப் பிராந்தியத்தில் மோசமடைந்து செல்லும் மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் அவசரமாக தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியுள்ளார்.

லிபியாவில் தற்போது *(12ஆம் பக்கம் பார்க்க)*



## 48 மணி நேர போர் நிறுத்தத்தை அமுல்படுத்த அரசு தயாராம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் குறித்து உத்தரவாதமளிக்கப்பட்டால் 48 மணிநேர போர் நிறுத்தமொன்றை அறிவிக்கத் தயார் என வெளிவிவகார அமைச்சை ஆதாரம் காட்டி சிங்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் நாச வேலைகளில் ஈடுபடமாட்டார்கள் என உத்தரவாதமளிக்கப்பட்டால் 48 மணி நேரபோர் நிறுத்தமொன்றை அமுல்படுத்த முடியும் என தூதுவராலயங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்த பிரதேசத்தில் *(02ஆம் பக்கம் பார்க்க)*

## பாதுகாப்பு வலயம் மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும்

### இணைத்தலைமைகள் அவசர கோரிக்கை

(வாஷிங்டன்)

பாதுகாப்பு வலயத்தின் மீதான தாக்குதல்களை இலங்கை அரசாங்கம் நிறுத்தவேண்டும்,மனிதாபிமான அடிப்படையில் இது முக்கியமானது என ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகளைக்கொண்ட இணைத்தலைமை நாடுகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாஷிங்டனில் *(02ஆம் பக்கம் பார்க்க)*

## பாதுகாப்பு வலயத்திலுள்ள மக்களை மீட்கும் நடவடிக்கை நேற்று ஆரம்பம்

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

மோதல் தவிர்ப்பு பிரதேசத்துக்குள் சிக்குண்டிருக்கும் பொது மக்களை மீட்பதற்காக படையினர் ‘உலகிலேயே மிகப் பெரிய மனிதாபிமான நடவடிக்கை’ ஆரம்பித்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. புதுமாத்தளனுக்கு தெற்கேயும் அம்பலவன் பொக்கணைக்கு மேற்கேயும் மோதல் தவிர்ப்பு பிரதேசத்தின் எல்லைப் பகுதிகளில் இராணுவத்தின் 58வது படைப்பிரிவு இந்த மீட்பு நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாக அது குறிப்பிட்டுள்ளது.

மோதல் தவிர்ப்பு பிரதேசத்திலிருந்து வெளியே *(12ஆம் பக்கம் பார்க்க)*

## இன்றும் திங்களன்றும் ஊரடங்கு தளர்வு

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்தவர்களின், உயிர்ப்பு பெருவிழாவை முன்னிட்டு இன்றும், தமிழ் சிங்கள புத்தாண்டு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 13ஆம் திகதியன்றும் இரவு ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுவதாக யாழ்.பாதுகாப்பு படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

கிறிஸ்தவர்களின், உயிர்ப்புப் பெரு விழாவை முன்னிட்டு நள்ளிரவு திருவிழிப்பு வழிபாடுகளில் *(12ஆம் பக்கம் பார்க்க)*

## இன்றும் கப்பல் சேவை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கான பிரயாணிகள் கப்பல் சேவை இன்றைய தினம் சனிக்கிழமை அன்று நடைபெறும் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

எனவே யாழ்.செயலகத்தால் வழங்கப்பட்ட ஏப்ரல் மாதத்தின் 4வது கப்பல் சேவைக்கு அனுமதிச்சீட்டை (Token) பெற்றவர்களும் அவசர தேவையின் *(02ஆம் பக்கம் பார்க்க)*

## கடும் காற்றுடன் கூடிய மழை 14ஆம் திகதி வரை தொடரும்!

### அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் கடும் காற்றுடன் கூடிய மழை எதிர்வரும் 14ம் திகதி வரை நீடிக்கும் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

நாட்டில் சீரற்ற காலநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இடையிடையே கடும் மழை பெய்யும். காற்று அதிகமாக வீசக் கூடும். இடி முழக்கமும் *(02ஆம் பக்கம் பார்க்க)*

புதுவருடத்தை முன்னிட்டு...

பால்மா வகைகள், கேக் தயாரிக்கும் பொருட்கள், சொக்லேட் வகைகள், பழ வகைகள், வாசனைப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள்

ரூபா 300/= ற்கு பொருட்களைகொள்வனவு செய்து நீங்களும் அதிர்ஷ்டமுள்ள எமது வாடிக்கையாளர்களாக இணையுங்கள்

ஸ்ரீமிலி சுப்பர் ஸ்பொட்
சந்தை அருகாமை, மானிப்பாய்.

(C-2272)

மிதிவெடிகளால் பாதிக்கப்பட்டவரும் சமூகத்தில் ஒரு அங்கத்தவரே

சர்வோதயம் யுனிசெப்

(C-2271)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# போர் நிறுத்தத்தை ஏற்படுத்தினால் இந்திய அரசுடன் பேசத் தயார்!

## தமிழ் கூட்டமைப்பு அறிவிப்பு

போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற் கான முயற்சிகளை இந்தியா மேற்கொண் டால் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு தாம் தயாராக இருப்பதாக தெரிவித்திருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர், ஆனால் தற்போ தைய நிலையில் இந்த அழைப்பை ஏற்றுக் கொள்வது என்பது வன்னியில் இன்று உரு வாகியுள்ள நிலைமைகளையிட்டு அனைத் துலகத்தில் உருவாகியிருக்கும் அக்கறை யைத் திசைதிருப்புவதாக அமைந்து விடும் எனவும் தெரிவித்துள்ளனர்.

வன்னியில் தீவிரமடைந்திருக்கும் போரை யடுத்து உருவாகியுள்ள தற்போதைய நிலை மைகள் தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர் மேனனு டன் பேசுவதற்கு புதுடில்லி வருமாறு இந்திய அரசாங்கத்தின் சார்பில் விடுக்கப்பட்ட அழைப் பை தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்துள் ளது.

தற்போதைய சூழ்நிலையில் இந்த அழைப் பை ஏற்றுக் கொள்வதில்லை என கூட்டமைப் பின் நாடாளுமன்ற குழு தீர்மானித்திருப் தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன் றக் குழுவின் கூட்டத்திலேயே இந்த முடிபு எடுககப்பட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர் கள் வெளிநாடு சென்றிருப்பதால் பத்து உறுப்பினர்கள் மட்டுமே இதில் கலந்து கொண் டனர்.

எதிர்வரும் 15,16ஆம் திகதிகளில் சிவ சங்கர் மேனனுடனான சந்திப்பு ஒன்றில் கலந்து கொள்வதற்காக புதுடில்லிக்கு வருமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பை இந்தியா அழைத் திருக்கின்றது.

புதுடில்லி விடுத்துள்ள இந்த அழைப்புத் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கிக் கூறிய மாவை சேனாதிராஜா, இது தொடர்பாக அவர்களுடைய கருத்துக்களை கேட்டார்.

போர் நிறுத்தம் ஒன்றை நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதில் அக்கறையுடன் இந்தியா எதையும் செய்யவில்லை எனச் சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் பேசுவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்ட போதிலும் இதுவரையில் அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனச் சுட்டிக் காட்டினார்.

தீவிரப்படுத்தப்பட்டுள்ள இராணுவ நட வடிக்கைகளால் பெருமளவு தமிழர்கள் கொல் லப்பட்டு வருகின்ற போதிலும் இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்தியா ஆக்கபூர் வமான எந்தவித நடவடிக்கையையும் எடுக் கவில்லை எனச்சுட்டிக் காட்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள், தமிழ் நாட் டின் உணர்வுகளையும் மத்திய அரசாங்கம் மதிக்கவில்லை எனவும் குறிப்பிட்டனர். (ச-5)

## பொறியியலாளர் நவரட்ணராஜா காலமானார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஓய்வு பெற்ற மின்பொறியியலாளர் வே.நவரட் ணராஜா நேற்று காலமானார். யாழ். மாநகர சபையின் மின் பொறியியலாளராகவும் நீர் வேலைப் பகுதி பொறியியலாளராகவும் கட மையாற்றிய இவர், யாழ். மாநகரசபையின் பதில் ஆணையாளராகவும் ஜி.ரி.சற் நிறுவனத் தின்நீர்வள ஆலோசகராகவும் பணியாற்றினார்.

மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட வே.நவரட்ணராஜாவின் பூதவுடல் அரசடிவீதி தஞ்சிலேன், யாழ்ப்பாணம் என்ற முகவரி யிலுள்ளஅவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. (ந)

## 219 தமிழர்கள் கம்பஹாவில் கைது

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்தில் கடந்த செவ் வாய்க்கிழமை மற்றும் புதன் கிழமைகளில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணை ந்து நடத்திய தேடுதல் நடவடிக்கைகளில் 219 தமிழர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக் கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கை தானவர்களில் அதிகமா னோர் வடக்கு கிழக்கு பகுதிகளைச் சேர்ந்தவர்கள். மிகுதியா னோர் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர் கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர் கள் எனவும் தனியார் கல்வி நிலையங்களை நடத்துபவர்கள், வேலை செய்பவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தேடுதலின்போது 1000 பேரை விசாரணைக்கு உட்படுத்தியதாகவும் சுமார் 1400 வாகனங்கள் சோதனையிடப்பட்டதாக வும் படையினர் தெரிவித்துள்ளனர். (ச-5)

## ரணில் விடுத்த வேண்டுகோளை அரசாங்கம் நிராகரித்தது

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வை பகிரங்க விவாதம் ஒன்றுக்கு வருமாறு ஐக்கிய தேசியக்கட்சி விடுத்திருக்கும் சவாலை இலங்கை அரசாங்கம் நேற்று வெள்ளிக் கிழமை நிராகரித்துள்ளது.

இலங்கையில் யுத்தநிறுத்தத்தை ஏற்படுத் துவது தொடர்பிலான பகிரங்க விவாதம் ஒன்று க்கு வருமாறு மருதானை மற்றும் புதுவெல் லப் பகுதிகளில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை நடை பெற்ற தேர்தல் பிரசார கூட்டத் தில் உரையாற்றிய ரணில் விக்கிரம சிங்க, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சவால் விடுத்திருந்தார்.

எனினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வுக்கு முக்கிய பல வேலைகள் இருப்பதாகவும் அவ்வாறு இல்லாவிடில் இந்த விவாதத்தில் கலந்து கொள்வார் எனவும் அமைச்சரவையின் பேச்சாளரும் அமைச்சருமான அநுர பிரியதர் ஷன யாப்பா தெரிவித்துள்ளார். (ச-5)

## பிடிக்காதவர் மீது காலணி வீசும் கலாசாரம் வேகமாக பரவுகிறது

## காங்கிரஸ் எம்.பியும் இலக்கு

(புதுடில்லி)

ஹரியானா மாநிலம் குருஷேத்திரா வில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தின் போது காங்கிரஸ் எம்.பி. நவீன் ஜின்டால் மீது காலணி வீசப்பட்டது. இதையடுத்து பொலி ஸார் காலணி வீசியவரை கைது செய்தனர்.

சமீபத்தில் டெல்லியில் நடந்த பத்திரிகை யாளர் கூட்டத்தில் உள்துறை அமைச்சர் சிதம் பரம் மீது சீக்கிய நிருபர் ஜர்னைல் சிங் காலணி யை வீசி இந்திய அரசியலை பரபரப்பாக்கி னார்.

இந்நிலையில் காங்கிர்ஸ் எம்.பி.ஜின்டால் இம்முறையும் தான் போட்டியிடும் குருஷேத் திரா தொகுதியில் நடந்த தேர்தல் பிரசார கூட் டத்தில் கலந்து கொண்டார்.

அப்போது கூட்டத்துக்கு வந்திருந்த ராம் குமார் என்ற ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர் ஜின்டால் மீது காலணி வீசினார். ஆனால் காலணி அவர் மீது படாமல் சென்றது. இதை யடுத்து அங்கு பாதுகாப்புக்கு இருந்த பொலி ஸார் அந்த நபரை கைது செய்து கூட்டத்தில் இருந்து தூக்கி சென்றனர்.

பிடிக்காதவர்கள் மீது காலணி எறியும் கலாசாரம் வேகமாக பரவி வருகிறது. ஈராக் நிருபர் ஒருவர் அமெரிக்க அதிபர் புஷ் மீது காலணியை வீசி இந்த கலாசாரத்தை தொடக்கி வைத்தார். (ச-5)

## பாதுகாப்பு வலயம் மீதான...

உள்ள அமெரிக்க வெளியுறவு திணைக் களத் தில் இருந்து வெளியிடப்பட்ட அந்த அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

வன்னிப் பகுதியில் ஏற்பட்டுள்ள மனிதப் பேரவலத்தை தடுக்கும் முகமாக இரு தரப்பும் போரை நிறுத்தவேண்டும்.

அரசாங்கம் பாதுகாப்பு பிரதேசத்தை மதித்து நடக்க வேண்டும். அங்குள்ள பொது மக்களை பாதுகாக்க வேண்டும். விடுதலைப் புலிகள் மக்களை நடமாட அனுமதிக்க வேண் டும்.


மேலும் பொதுமக்களின் படுகொலைக ளை நிறுத்தும் நோக்கத்துடன் பாதுகாப்பு பிர தேசத்தின் மீதான எறிகணைத் தாக்குதல்க ளை இலங்கை அர சாங்கம் நிறுத்த வேண்டும். மனி தாபிமான அடிப்படையில் இது முக்கி யமானது.

பொதுமக்கள் தங்கியுள்ள பிரதேசத்திற் கான மருந்துப் பொருட்கள், உணவு, குடிநீர் என்பவற்றின் விநியோகம் மேற்கொள்ளப் படவேண்டுமென அதில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள மோதல்களை எவ்வாறு பேரழிவுகளின்றி நிறுத்தலாம் என்ற தலைப்பில் அமெரிக்கா வின் தென்னாசிய மற்றும் மத்திய ஆசியாவுக் கான வெளிவிவகார பிரதிச் செயலாளர் ரிச்சட் பௌச்சரினால் ஏற்பாடு செய்யப்பட்ட தொலை பேசி மாநாட்டின் முடிபிலேயே இந்த அறிக் கை வெளியிடப்பட்டுள்ளது. (ச-5)

## மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் கந்தசாமி



யாழ்ப்பாணம் அனலைதீவு, ஆறாம் வட் டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கொள்ளுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கந்தசாமி அவர் கள் 09.04.2009 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் அமரர்களான சுப்பிரமணியம், மீனாட்சி தம்பதியரின் புத்திரனும், அமரர் களான வேலுப்பிள்ளை, பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், திருமதி இரத்தினம் கந்தசாமி அவர்க ளின் அன்புக் கணவரும், சிவசுதன், கிருஷ்ணகுமார், இரத்தின லதா, ஜஜிதேவன், அமரர் பரிமளா, அமரர் கோசலா, தினேஷ் (கொழும்பு, கொம்பியூட்டர் எக்ஸ்பிரஸ்), குமரன்(கொழும்பு பல் கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும்,

அமரர் மார்க்கண்டு, ந.யோகம்மா, இ.விஜயலக்ஷ்மி ஆகி யோரின் அன்பு சகோதரனும், சு.தங்கம்மா, அமரர் சின்னராசா, இராசையா, க.சிவக்கொழுந்து, சிவசாமி, யோகராசா ஆகியோரின் மைத்துனரும், தருஷாவின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 11.04.2009 இன்று சனிக்கிழமை அஞ் சலிக்காக கல்கிஸ்சை மஹிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு 12.04.2009 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இறுதிக் கிரிகைகள் நடைபெற்று கல்கிஸ்சை மயானத்தில் தகனம் செய்யப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 20 -3D பல்மேறா
மாவத்தை,
கொள்ளுப்பிட்டி,
கொழும்பு.

T.P.0115627050
Mob. 0712521014

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

## கடும் காற்...

அடிக்கடி ஏற்படும்.

இது குறித்து பொதுமக்கள் எச்சரிக்கை யுடன் நடந்து கொள்ள வேண்டும் என அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று அதிகாலை வேளை முதல் யாழ்ப்பாணத்தில் கடும் மழை பெய்து வருகின்றது.

இடையிடை யே கடும் காற்றும் வீசிய தால் சில இடங்களில் பயன்தரு மரங்கள் முறிந்துள்ளன. (ச-3)

## இன்று கப்...

நிமிர்த்தம் பிரயாணம் மேற்கொள்ள இருப் பவர்களும் இன்று காலை 8.00 மணிக்கு பிரயாண ஏற்பாடுகளுடன் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (ச)

## 48 மணி...

உள்ள பொதுமக்கள் வெளியேற குறைந்த பட்சம் ஒருவார கால போர் நிறுத் தமொன்றை அமுல்படுத்துமாறு மேற் குலக நாடுகள் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிரா கரித்துள்ளது. (ச-5)


## இடமாற்றமும் மலிவு விற்பனையும்

கஸ்தூரியார் வீதியிலிருந்து 319 A கே.கே. எஸ்.வீதிக்கு இடம் மாற்றப்பட்டுள்ள எமது ஸ்தாபனமான நியு சிற்றி றேடர்ஸ் இல் சகல விதமான சுவர்- மேசை- கை மணிக்கூடுகளையும், வீட்டு மின்னிணைப்புப் பொருத்த தேவையான சகல பொருட் களையும், கிறைண்டர், சாச்சர் லைட், பற், ஸ்டபிளைசர், மின் கேத்தல், ஹொட் பிளேட், அயன், ஓவன், றைஸ் குக்கர், பிறசர் குக்கர், காஸ் குக்கர் ஆகியவற்றை ஒரே கூரை யின் கீழ் பெற்றுக் கொள்ளவும் திருத்திக் கொள்ளவும் நாட வேண்டிய ஒரே இடம்

நியு சிற்றி றேடர்ஸ்,
319 (A) கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P. 021222 3226

*மேற்படி ஸ்தாபனத்திற்கு யாழ். நகரில் வேறெங்கும் கிளைகள் இல்லை.* (2500)



BOC ලංකා බැංකුව இலங்கை வங்கி

## இலங்கை வங்கியின் விசேட அறிவித்தல்

நெல்லியடிக் கிளை ஏப்ரல் 11.2009 இன்று முதல் பிரதி சனிக்கிழமை தோறும் உங்கள் நலன் கருதி திறந்திருக்கும். மு.ப. 8.30 மணி தொடக்கம் பி.ப. 1.00 மணி வரை உங்களுடைய வங்கி நடவடிக்கை களை அடகு சேவை உட்பட இங்கு மேற்கொள்ள முடி யும்.

தற்போது யாழ். குடா நாட்டில் யாழ். அதி மேற் தரக்கிளையுடன் நெல்லியடிக் கிளையும் சனிக் கிழமை வங்கிச் சேவையில் இணைந்துள்ளதனை மகிழ் வுடன் அறியத்தருகிறோம்.

உதவிப் பொது முகாமையாளர்,
வட பிராந்தியம்,
இலங்கை வங்கி.

(C-2295)

## இன்று ஒரு தகவல்

# குருதியின் வகைகள்

எல்லோர் உடம்பிலும் ஒரே இரத்தம் தான்...! இருந்தாலும் இந்த இரத்தத்தில் பலவகையுண்டு.

இது பலருக்குத் தெரிந்த விடயம்.

இரத்தத்தில் பலவகையுண்டு என்பதை முதன் முதலில் கண்டு பிடித்தவர் யார் தெரியுமா?

1890 இல் ஆஸ்திரியாவைச் சேர்ந்த கார்ல் லான்ட்ஸ்ரீனர் என்பவர்தான் கண்டு பிடித்தார்.

அதற்கு முன்னர் விபரம் தெரியாமல் ஒரு மனிதனின் இரத்தத்தை எடுத்து இன்னொரு மனிதனுக்கு செலுத்தும் போது ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக சில நாடுகளில் இப்படி இரத்தம் செலுத்தும் முறையை தடை செய்யக்கூடிய சட்டம் எல்லாம் இயற்றியிருக்கிறார்கள்.

பழங்காலத்தில் மருத்துவர்கள், இரத்த இழப்பினால் வலுக்குறைந்தவர்களுக்கு விலங்குகளின் இரத்தத்தைக் கூட செலுத்திப் பார்த்திருக்கிறார்கள். அதனால் ஆபத்து தான் ஏற்பட்டது.

கார்ல் லான்ட்ஸ்ரீனர் இரத்தத்தின் வகைகளைக் கண்டு பிடிக்கும் வரை சிக்கல்தான்.

1902 இல் தான் அவர் மனிதனின் இரத்தத்தில் A,B,AB,O எனும் நான்கு வகை இருப்பதைக் கண்டு பிடித்து வெளியிட்டார்.

ஒவ்வொரு மனித உடலிலும் இதில் ஒரு வகை இருக்கும்.

ஒருவகை இரத்தத்தை அதே வகை இரத்தமுடைய மனிதர்களுக்கு செலுத்தினால் கெடுதல் ஏற்படாது. Oவகை இரத்தத்தை எல்லா வகையினருக்கும் செலுத்தலாம்.

A அல்லது B வகை இரத்தத்தை AB வகை இரத்தம் உள்ளவர்களுக்குச் செலுத்தலாம்.

ஆனால் AB வகை இரத்தத்தை A வகை அல்லது B வகை இரத்தம் உள்ளவர்களுக்கு செலுத்தக்கூடாது. O வகை இரத்தம் உடையவர்களுக்கு மற்ற வகை இரத்தங்களைச் செலுத்தக்கூடாது. A,B,ஆகிய வகை இரத்தங்களையும் கலக்கக் கூடாது.

இந்தக் கண்டுபிடிப்புக்காக, லாண்ட்ஸ்ரீனருக்கு 1930 இல் மருத்துவம் மற்றும் உடல் செயல் இயலுக்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது. இன்று அறுவைச் சிகிச்சைகள் எல்லாம் சர்வ சாதாரணமாக நடப்பதற்கு அவரின் கண்டுபிடிப்பு தான் உதவியாக இருக்கிறது.

ஒரு ஒபரேஷன் தியேட்டரில் அறுவைச் சிகிச்சை நடந்து கொண்டிருந்தது. அந்த ஒபரேஷன் தியேட்டர் வாசலில் இரண்டு பெண்கள் மிகவும் பதட்டத்துடன் உட்கார்ந்திருந்தார்கள்.

ஒரு பெண் இன்னொரு பெண்ணைப் பார்த்து...

"நீ ஏன் இப்படி பதட்டத்துடன் இருக்கிறாய்?" என்றார்.

அதற்கு அந்தப் பெண், "உள்ளே ஒபரேஷன் நடக்கப் போவது என் வீட்டுக்காரருக்குத்தான். இதுவரை அவருக்கு எந்த நோயும் வந்ததில்லை. அது நல்லபடியாக முடியவில்லை என்றால் என்னுடைய எதிர்காலம் என்ன ஆகுமோ என்று பயமாக இருக்கிறது" என்றார்.

"இந்த ஒபரேஷன் நல்லபடியாக முடியவில்லை என்றால் என்னுடைய எதிர்காலமும் என்ன ஆகுமோ? என்று பயந்து கொண்டிருக்கிறேன்" என்றார் இவர்.

"நீ ... யார்?" என்றார் அவர்.

"உள்ளே ஒபரேஷன் பண்ணப் போகும் டாக்டரின் மனைவிதான் நான். அவருக்கும் இதுதான் முதல் ஒபரேஷன்" என்றார் இவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# லிபியாவுடன் இலங்கை அரசு மூன்று இருதரப்பு ஒப்பந்தங்களில் கைச்சாத்து

(கொழும்பு)

இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு லிபியாவிற்குச் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் லிபியா அரசாங்கத்துடன் இருதரப்பு ஒப்பந்தங்கள் மூன்றில் கைச்சாத்திட்டுள்ளனர்.

உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், இயந்திரவியலாளர்களைப் பரிமாறிக் கொள்ளல், பொருளாதாரம் மற்றும் வர்த்தகத் துறைகளை மேம்படுத்தல் ஆகிய துறைகளை உள்ளடக்கிய மூன்று ஒப்பந்தங்களே இருதரப்பிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

லிபியா பிரதமர் காரியாலயத்தில் லிபிய பிரதமர் பேராசிரியர் அல் படாடி அலி அல்மஹ் முதியுடன் இருதரப்பு சந்திப்பு இடம் பெற்றுள்ளது. இதற்குப் பின்னரே இந்த மூன்று ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினருக்கும், லிபிய பிரதமர் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இரு நாடுகளிக்கும் இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது.

லிபியாவில் இலங்கையர்களுக்கு ஒரு லட்சம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன் விசேடமாக சுகாதார துறையில் வைத்தியர்கள், தாதியர்களுக்கான தொழில்வாய்ப்புகள், நிர்மாண மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் கூடியளவான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் லிபிய பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறையை மேம்படுத்தல், இலங்கையில் தொலைத்தொடர்பு வசதிகளை மேம்படுத்தல் ஆகிய வேலைத்திட்டங்களுக்கு லிபிய அரசாங்கம் தொழில் நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்குவதற்கும், வடக்கு, கிழக்கில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் இணங்கியுள்ளது.


இதேவேளை, ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் லிபிய முதலீட் டாளர் கள் மற்றும் வர்த்தகர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

அந்நாட்டுப் பிரதமரின் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது, இலங்கையில் முதலீடுகளைச் செய்வதற்கான துறைகள் தொடர்பில் அங்குள்ள முதலீட்டாளர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. (6)

# செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலய ஆசிரியர்களுக்கான விஞ்ஞான பாட செயல்மர்வு எதிர்வரும் 17 ஆம் திகதி 8.30 மணி முதல் 3.30 மணிவரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார். (4-19)



உரும்பிராய் ஸ்ரீ மகாமாரி அம்மன் தேவஸ்தானத்தினரால் கவிமணி க. ஆனந்தராசாவின் சமயப் பணிகளைப் பாராட்டி அண்மையில் "சக்தி உபாசகர்" எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அதிபர் அ. ஈஸ்வரநாதன், வேதமந்திர வித்யாபூஷணம் க.மு. ஜெகநாதக் குருக்கள், வேதமந்திர வித்யாசாகரம் க.மு. சோமசுந்தரக் குருக்கள், ஆலய நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர்.

## இராசி பலன்

11.04.2009
(பங்குனி 29, சனிக்கிழமை)
துதியை முன்னிரவு 09.05 மணிவரை
சுவாதி மாலை 5.29 மணிவரை
இராகுகாலம் 9.06-10.36 மணிவரை
சுபநேரம் 3.06-4.36 மணிவரை
காரைக்காலம்மையார் குருபூஜை,
புங்குடுதீவு பாணாவிடைச் சிவன்,
தெல்லிப்பளை கலசி விநாயகர் கொடியேற்றம்,
அல்லேலூயா சனி, அமிர்தசித்தம்.

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், உற்சாகம், விருந்துபசாரம், கலந்துரையாடல். |
| இடபம் | செய்தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி, தனலாபம், நோய் குணமடைதல். |
| மிதுனம் | அஜீரணக்கோளாறு, புத்திரரால் கவலை, வேலைச்சுமை, பணக் குறைவு. |
| கடகம் | நல்ல முயற்சி, மனச்சோர்வு, தாய் வழி உறவு, பிரயாண நன்மை. |
| சிங்கம் | காரிய அனுகூலம், உறவினர் வருகை, போசன சுகம், ஜன வசியம். |
| கன்னி | மனோ சங்கடம், அதிக செலவு, காரிய தாமதம், திடீர் நன்மை. |
| துலாம் | மாதர் நட்பு, புதிய முயற்சி, வெகுமானம், போசன சுகம். |
| விருச்சிகம் | சிந்தனை மிகுதி, சோம்பல் நிலை, சுபசெலவு, பிரயாண அலைச்சல். |
| தனுசு | நண்பர்கள் வருகை, குடும்ப சுகம், காரிய நன்மை, பொருள் சேர்க்கை. |
| மகரம் | எடுத்த காரியம் கைகூடும், இன சனத் தொடர்பு, பொருள் சேர்க்கை, கௌரவமான நிலை. |
| கும்பம் | சரீரப் பிரயாசை, இடமாற்றம், எதிர்பாராத செலவு, தேவையற்ற பயம். |
| மீனம் | அஜீரணக் கோளாறு, வீண் பகை, முயற்சி தாமதம், பணக் குறைவு. |

வளவன்


# க.பொ.த.(சா/த) பரீட்சைப் பெறுபேறுகள்

**வேலணை மத்திய கல்லூரி (நவோதயா பாடசாலை)**

கே. முகுந்தகுமார் - 5A,2B, C,S, கே. மகிந்தன் - 4A,B,3C, ஜி. கபூரன் - 3A,3B,2C, ரி. யனோச்- 3A,B,4C, ஆர். ஜிகிதா - 2A,2B,4C, ரி. பவதாரணி- 2A,3B,2C,S, கே. துஷ்யந்தன் - 2A,3B,C,S, எஸ். தர்சிகா - 2A,B,2C,3S, ஆர். சிந்துகா - 2A,B,2C,2S, எஸ். நிரஞ்சனி - 2A, B,C,4S, எஸ். கம்ஷா - 2A, 2C,4S, ரி. உசாந் தினி- 2A, 2C,4S, கே. நிர்மலா - 2A, C,5S, வை. சயந்தினி - 2A,3C,2S. (6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 50 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 40 | 50 |
| தக்காளி | 60 | 50 |
| அவரை | -- | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 60-70 | 70 |
| கோவா | 10 | 20 |
| கரட் | 30 | 40 |
| பூசணி | 15 | 20 |
| புடோல் | 30 | 20 |
| வாழைக்காய் | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 35 | 35-40 |
| பெரிய வெங்காயம் | 120 | 80-100 |
| பாகற்காய் | 40 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 50 |
| கரணைக் கிழங்கு | 60 | 50 |
| பயிற்றங்காய் | 30 | 40 |
| லீக்ஸ் | 110 | 110 |
| போஞ்சி | -- | -- |
| கீரை - 1 பிடி | 10 | 20 |
| தேசிக்காய் | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30-35 |


சாவகச்சேரி கொமர்ஷல் வங்கிக் கிளையின் மூன்றாம் ஆண்டு நிறைவு நிகழ்வில் மட்டுவில் கமலாசினி வித்தியாலய அதிபர் எஸ்.பேரின்பநாதன் உரையாற்றுவதையும், முகாமையாளர் எஸ்.பி.குருபாதம், மீசாலை வீரசிங்கம் அதிபர் கே. சிவானந்தம் மற்றும் வங்கி உத்தியோகத்தர் அமர்ந்திருப்பதையும், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தமிழ்மொழி மூலம் தோற்றி தேசிய ரீதியில் முதலாம் இடம்பெற்ற மீசாலை வீரசிங்கம் மாணவன் த. பாசுபதனுக்கு சேமிப்புச் சான்றிதழை முகாமையாளர் வழங்குவதையும்,நிகழ்வில் கலந்து கொண்ட பெற்றோர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:சாவ.நிருபர்)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஆங்கில ஆசிரியருக்கான யாழ். பல்கலைக்கழகத்தால் ஒழுங்கு படுத்தப்பட்ட டிப்ளோமா கற்கை நெறியில் (2004/2006) தோற்றி சித்தியடையத்தவறிய அனைத்து ஆசிரியர்களும் இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு மீள்பரீட்சை தொடர்பாக கலந்துரையாடுவதற்காக யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் ஒன்றுகூடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (6)

## தன்னியக்க இயந்திர சேவை பாதிப்பு

(அல்வாய்)

பருத்தித்துறையில் உள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் தன்னியக்க இயந்திர சேவை ( A.T.M ) நேற்று முதல் இயங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக புதுவருடத்தை முன்னிட்டு வங்கிக்கு வரும் வாடிக்கையாளர்கள் தன்னியக்க இயந்திர சேவை மூலம் பணத்தை பெற முடியாது அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(6 - 19)

## வரவேற்பு விழாவும் பிரிவுபசார விழாவும்

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் மத்திய சனசமூக நிலையம், கொட்டியம்பதி ஆதி முத்துமாரியம்மன் தேவஸ்தானம்; சக்தி முன்பள்ளி, சக்தி விளையாட்டுக்கழகம் ஆகியவை இணைந்து நடாத்தும் ஜே/169 இன் கிராம உத்தியோகத்தர்களுக்கான வரவேற்பு விழாவும் பிரிவுபசார விழாவும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சக்தி விளையாட்டுக் கழக மண்டபத்தில் தொல்புரம் மத்திய சனசமூக நிலையத் தலைவர் சு.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி மேற்கு சுழிபுரம் பிரதேச செயலாளர் சு.புத்தி சிகாமணி கலந்து கொள்ளவுள்ளார். (6-4)

## நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கான நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி கல்வியியலாளர்களும் கல்விசாரா ஊழியர்களும் தமது ஒருநாள் வேதனத்தை வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு வழங்கவென 35 ஆயிரம் ரூபாவினை கந்தர்மடத்திலுள்ள இந்துசமயப் பேரவை அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர் என கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தெரிவித்துள்ளார். (6)

## சரசாலை பொதுநூலகத்தினால் மாணவர்களுக்கான போட்டிகள்

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தில் மாதம் தோறும் பத்திரிகைகளில் வரும் விடயங்கள் தொடர்பான போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப் படவுள்ளது.

நூலகத்தில் அங்கத்தவர்களாக உள்ள பாடசாலை மாணவர்கள் இப் போட்டிகளில் பங்கு பற்றமுடியும் எனவும் இதன்மூலம் மாணவர்கள் மத்தியில் பத்திரிகை வாசிக்கும் பழக்கத்தை மேம்படுத்துவதே தமது நோக்கம் என்றும் நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (6-29)

## 'துயரத்தின் விளிம்பில்' நாடக ஆற்றுகை



(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களினால் கிறிஸ்தவர்களின் திரு நாட்களில்ஒன்றான ஈஸ்ரர் தின சிறப்பு நிகழ்வாக துயரத்தின் விளிம்பிலும் இறை நம்பிக்கையோடு வாழமுடியும் என்ற பக்திபூர்வமான சடங்கு நிலைப்பட்ட திருப்பாடுகளின்நாடகம் ஆற்றுகை மேடையேற்றப்படவுள்ளது.

இந் நாடக ஆற்றுகை நாளை மாலை பி.ப 4 மணிக்கு கல்லூரி ஓட்லி மண்டபத்தில் கல்லூரி முதல்வர் என்.ஏ.விமலேந்திரன் தலைமையில் நாடக ஆசிரியர் ஏ.சி. பிரான்சிஸின் நெறிப்படுத்தலில் இடம்பெறவுள்ளது.

கடந்த நான்கு வருடமாக கல்லூரியில் ஈஸ்ரர்தின மாலை நிகழ்வாக திருப்பாடுகளின் காட்சியை மேடையேற்றி வருகின்றனர்.

பாடசாலை மட்டத்தில் இவ்வாறான நாடகங்களை மேடையேற்றுவதன் மூலம் மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிக் கொணர்வதோடு குடாநாட்டில் நாடகக் கலையையும் வளர்க்க முடியும் என இவ் நாடகத்தை நெறிப்படுத்திய ஆசிரியர் ஏ.சி. பிரான்சிஸ் தெரிவித்தார்.

இவ் நாடக ஆற்றுகை நிகழ்வில் கல்லூரி மாணவர்கள்80பேர்நாடகப்பாத்திரங்களைஏற்று நடிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-27)

### யாழ்.பிரதேச செயலக

## சமுர்த்தி மகாசங்க பிரிவுக்குட்பட்ட வங்கிகளின் புதுவருட வேலைத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி மகாசங்க பிரிவுக்குட்பட்ட யாழ். நகர் கிழக்கு ,மேற்கு வங்கிகளின் புதுவருடத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் புதுவருட தினத்தன்று காலை 7 மணிக்கு வங்கிகளில் ஆரம்பமாகவுள்ளது.

அத்துடன் 14ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை சேமிப்பு வாரம் எனவும் குறித்த காலப்பகுதியில் கணக்கில் வைப்பில் இடுவோருக்கு ஏற்றவாறு பரிசில் கள் வழங்கப்படும் எனவும் புதுவருட தினத்தன்று சகல வைப்பாளர்களுக்கும் கைவிசேடம் வழங்கப்படவுள்ளதாகவும் யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி மகாசங்க நிர்வாக இயக்கு நர் எம்.கியூமன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பங்குக் கணக்கு , குழுக் கணக்கு, சிறுவர் கணக்குகளில் ஆயிரத்திற்கு மேல் வைப்பிலிடுவோருக்கு சீட்டிழுப்பு நடைபெறவுள்ளது. இதில் முதலாம் பரிசாக 5ஆயிரம் ரூபாவும் , இரண்டாம் பரிசாக 3ஆயிரம் ரூபாவும்,3ஆம் பரிசாக 2ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது. (6)

## மீனைச் சந்தைப்படுத்தும் வாடி மீண்டும் பாவனைக்கு விடப்படவுள்ளது

(குருநகர்)

குருநகர் கடற்றொழிலாளர்கள் பிடிக்கும் மீனை சந்தைப்படுத்தும் இடமாக இருந்த வாடி 2006ஆம் ஆண்டு நாட்டுப் பிரச்சினை காரணமாக நடைபெறாமல் இருந்தது.

தற்போது கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் குத்தகையாளர் சங்கம், இழுவை இறால் சங்கம், சிறகு வலைச் சங்கம், கூட்டுறவு கடற்றொழில் சங்கங்களிடையே அண்மையில் நடந்த கலந்துரையாடலின் போது எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமைமுதல் மீண்டும் பாவனைக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தலைவர் யூலியஸ் சகாயராசா தெரிவித்துள்ளார். (6-39)

## சிறந்த மாதர் சங்கங்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மகளிர் தின நிகழ்வில் சிறந்த மாதர் சங்கங்களாக கொழும்புத்துறை கிழக்கு மாதர் கி.அ.சங்கம், பாசையூர் மேற்கு மாதர் கி.அ.சங்கம், பெரியகடை மாதர் கி. அ.சங்கம், கோட்டை மீனாட்சி மாதர் கி.அ.சங்கம் ஆகிய நான்கு மாதர் சங்கங்கள் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளன. (6-30)

## க.பொ.த.(சா/த) பரீட்சை பெறுபேறுகள்

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**

பா.ராகினி- 6A 2B,கி.சிவச்சந்திரன்6ABC, இ.அனோஜா-5AB2CS, ம.பிரிணி 5AB2CS , ந.தாரணி-4AB3C, ம.சோபிகா-4AB3C, த.நிதர்சனா4A4B, இ குவைசிகா 3AB4CS, நா.லாவண்யா 3A2BC2S, யோ.நர்மிதா 3AB3CS, பா. சஞ்சிகா 3AB3CS, நா.தர்சிகா 3A2B2C2S, ஜெ.வித்தியா 3AB4S (6)

## பங்குனி திங்கள் உற்சவம்

(யாழ்ப்பாணம்)


திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள் ஆலய ஐந்தாம் பங்குனித் திங்கள் உற்சவத்தில் நாளை மறுதினம் பிற்பகல் 12 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி மாலை 4 மணிக்கு அபிஷேகம் வசந்த மண்டப பூசை அம்பாள் திரு வீதியுலா என்பன இடம்பெறவுள்ளது. (6-30)

## கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

(மருதங்கேணி)

வடமராட்சி கல்வி வலய முறைசாரக் கல்விப் பிரிவி னரின் அனுசரணையுடன் வேலாயுதம் மகாவித்தியாலய கணனி கற்கை நிலையத்தினால் கணனிப் பயிந்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

இதில் இணையத்தினூடான கற்றல் , சிறுவர்களுக் கான ஆரம்ப கணனிபயிற்சி போன்ற கற்கை நெறிகள் இடம் பெறவுள்ளது. (6-35)




## கல்வியியற்கல்லூரி நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

கல்வியியற் கல்லூரி 2009 ஆண்டிற்கான கணிதம் (ஆங்கிலம் மொழிமூலம்) பயிற்சி நெறிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள மேலும் இருவரான எம்.டேவிட் டினேஸ் குமார் (அராலி வடக்கு வட்டுக்கோட்டை) பி.அகிலன் (அராலி தெற்கு வட்டுக்கோட்டை) ஆகியோருக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் கடிதம் கிடைக்காவிடின் கல்வியற்கல்லூரியுடன் தொடர்புகொள்ளுமாறும் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தெரிவித்துள்ளார். (6)



புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தையினால் ஏற்பாடு செய்யப்பட்ட வீதிச் சிலுவைப் பாதை தவக்காலத்தின் ஆறாவது வெள்ளிக்கிழமையான கடந்த 3ஆம் திகதி குருநகர் தொடர்மாடியில் ஆரம்பமாகி -வீதிவழியாக வலம் வருவதைப் படத்தில் காணலாம்.

# இலங்கையில் தமிழர்

119

### சிங்களவரும் - தமிழரும்: இணைச் சாதனையாளர் 1070 – 1200

இன்னொரு பௌத்த கோயிலும் இத்தகைய பண்புகளைக் காட்டுகிறது. இது இலங்கையின் தென்கரையிலுள்ள உற்பல வண்ணன் ஆலயம் ஆகும். தமிழ்நாட்டுக் கோயில்களைப் போன்று தனியே கல்லால் கட்டப்பட்டுள்ள இக் கோயில் தமிழர் கட்டடக் கலையின் ஓர் எடுத்துக்காட்டு என்பர் பேராசிரியர் ஸேனக பண்டாரநாயக.

**சிற்பம்**

இலங்கையில் வளர்ந்த நாகரிகத்தில் சிற்பக் கலை தலைசிறந்த இடத்தைப் பெறுகின்றது. இலங்கையில் இக் கலை தொடர்பாகத் தனித்துவமான பண்புகள் மிக முற்பட்ட காலத்திலிருந்தே தோன்றி வளர்ந்தன என்பதைக் கலை விமர்சகர்கள் ஒப்புக் கொள்வர்.

இவ்வாறு முன்பிருந்தே வளர்ச்சி பெற்று வந்த மரபுகள் பதினோராம் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் உச்சக்கட்டத்தை அடைந்தன. பொலநறுவை தலைநகராக இருந்த இக் காலத்தில் இலங்கை நாகரிகத்தின் உயர் சிறப்பு நிலை அடையப்பட்டது.

ஏனைய துறைகளிற்போல், சிற்பத் துறையிலும் இக் காலத்தில் ஈட்டப்பட்ட சாதனைகள் தமிழ்ச் சிற்பிகளும் சிங்களச் சிற்பிகளும் கூட்டாக இணைந்து சாதித்தவை. பொலநறுவை மற்றும் அனுராதபுரம் போன்ற இடங்களில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட சைவ வைணவ வெண்கலச் சிற்பங்கள் மிகச் சிறந்த கலை வேலைப்பாடுகளுள் வைத்தெண்ணப்படுவனவை என்பது இலங்கையின் சிற்ப வரலாற்றை அறிந்தோருக்கு நன்கு தெரியும்.

அதேபோல், இக் காலத்தைச் சேர்ந்தவையாய் பொலநறுவையிலும் வேறிடங்களிலும் கிடைத்த பௌத்த வெண்கலச் சிற்பங்களும் கற் சிற்பங்களும் பௌத்த சிற்பக் கலை அடைந்த உச்சக்கட்டத்தை வெளிப்படுத்துபவை.

பொலநறுவையில் கிடைத்த சைவ வெண்கலச் சிற்பங்களில் கலை விமர்சர்களும் பிறரும் பெரும் கவனம் செலுத்தி, அவை பற்றி எழுதியுள்ளனர். இவர்களுள் பிரபல கலை விமர்சகர் ஆனந்த குமாரசுவாமியும் ஒருவராவார். இச் சிற்பங்களுள் பெரும்பாலானவை 1907 மற்றும் 1908 ஆண்டுகளில் தொல்லியல் ஆய்வு ஆணையாளர் எச்.சி.பி.பெல் அகழ்ந்து வெளிப்படுத்தியவை.

இதன்பின்னர் 1960,1982 மற்றும் 1984 ஆகிய ஆண்டுகளில் பொலநறுவையிலும் அனுராதபுரத்திலும் மேலும் பல சைவ வெண்கல விக்கிரகங்கள் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டன.

இவ்வாறு கிடைத்த பல சிற்பங்களுள் மிக முக்கியமானவை நடராஜர் சிற்பங்கள். இவற்றுள் ஒன்று உலகில் உள்ள நடராஜர் சிலைகளுள் சிறப்பு மிக்க ஒன்றாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஏனைய வெண்கலச் சிற்பங்களுள் சோமாஸ்கந்தமூர்த்தி, பார்வதி, சிவகாமசுந்தரி, பிள்ளையார், சண்டிகேசுவரர், சுந்தரமூர்த்தி நாயனார் மற்றும் காரைக்கால் அம்மையார் ஆகியோர் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை.

இச் சைவ சிற்பங்களைப் போன்று, இக் காலத்துப் பௌத்த சிற்பங்களும் இலங்கையில் வார்க்கப்பட்ட சிற்பங்களுள் மிகச் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன.

எட்டாம் நூற்றாண்டளவிலிருந்து சிற்பிகள் கடைப்பிடித்த உயரிய கலை மரபுகளின் தொடர்ச்சியையும் வளர்ச்சியையும் இவை காட்டி நிற்கின்றன. இவ்வாறு இலங்கையில் பௌத்த சிற்பங்களும் சைவ சிற்பங்களும் அடைந்த உயரிய நிலையை நோக்குமிடத்து, எட்டாம் நூற்றாண்டு தொட்டுப் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரைப்பட்ட காலப் பகுதியை இலங்கைச் சிற்பக் கலை வரலாற்றின் பொற்காலம் எனச் சில கலை விமர்சகர்கள் வர்ணித்திருப்பதில் ஆச்சரியமில்லை.

சோழர் ஆட்சியின்போது இச் சிற்பக் கலையின் வளர்ச்சி பாதிக்கப்பட்டது என்று கூற முடியாது. மாறாக, சிங்களச் சிற்பிகளும் தமிழ்ச் சிற்பிகளும் ஒத்துழைத்துப் பௌத்த சிற்பங்களையும் சைவ வைணவச் சிற்பங் களையும் உருவாக்கினர் என்றே கூறவேண்டும்

இலங்கையில் சிற்பக் கலைத் துறையில் இடம்பெற்ற முன்னேற்றங்களைத் தென்னிந்தியாவில் இத் துறையில் காணப்பட்ட வளர்ச்சிகளின் பின்னணியில் விளங்கிக் கொள்ள வேண்டும். தென்னிந்தியாவிலே பல்வேறு பிரதேசங்களில் பிரதேச வேறுபாடுகளுடன் சிற்பக் கலை இக்காலப் பகுதியில் உச்சக்கட்டத்தை அடைந்தது. தமிழ்நாட்டில் இக் காலப் பகுதி முழுவதும்சோழர் ஆட்சி நடைபெற்றது.

இதற்கு முன், ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் பல்லவரும் பாண்டியரும் ஆண்ட போது வளர்ந்த சிற்பக் கலை சோழர் ஆட்சியின் போது மேலும் ஓர் உயர்ந்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இவ்வாறு வளர்ந்த கலை மரபுகள் சைவ வைணவ மதங்களுக்கும் பௌத்தத்துக்கும் பொதுவானவையாய் இருந்தன என்பதை மறக்கக் கூடாது. பௌத்த கட்டடங்களையும் சைவ வைணவக் கோயில்களையும் அமைப்பதற்கு ஒரு பொதுப்பட்ட தமிழர் கட்டடக் கலைப்பாணி இருந்தது போலப் பௌத்த சிற்பங்களையும் சைவ வைணவ சிற்பங்களையும் அமைப்பதற்கு அவ்வவ் சமய விக்கிரகங்களுக்கு உரிய பண்புகளுக்கேற்ப வேறுபாடுகள் இருந்தாலும், கலைப்பாணி ஒன்றாகவே இருந்தது.

**கிழக்கு இலங்கையில் தமிழர் சிற்பக்கலை**

அரசியலில் சோழருக்கும் சிங்கள வம்சத்தவர்க்கும் இடையில் இருந்த பகைமை கலைத்துறையில் தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையில் உறவு இருப்பதைத் தடை பண்ணவில்லை. ஏற்கனவே கிழக்கு இலங்கையில் தமிழ்நாட்டுப் பௌத்தத்தின் செல்வாக்குப் பரவியிருந்தமை முன்னர் குறிப்பிடப்பட்டது.

சைவ வைணவர்களுடைய பக்தி இயக்கம் நடைபெற்றபோது தமிழ்ப் பௌத்தர்கள் தமிழ்நாட்டிலிருந்து கிழக்கு இலங்கையில் இருந்த பௌத்த குடியிருப்புகளுக்குப் புலம்பெயர்ந்திருக்கலாம். இவர்கள் கிழக்கு இலங்கையில் தமிழர் சிற்பக் கட்டடக் கலைகளின் செல்வாக்குப் பரவுவதற்கு உதவியிருப்பர்.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

கிழக்கு இலங்கையில் தமிழ்நாட்டு மஹாயான பௌத்தத்தின் செல்வாக்குச் சிற்பக் கலையில் இக் காலத்தில் வெளிப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இதற்கு முற்பட்ட காலத்திலேயே, அதாவது நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் , கிழக்கு இலங்கையில் இருந்த தேரவாத பௌத்த நிறுவனங்களில் ஆந்திரச் சிற்பக் கலைப் பாணிக்குரிய சிற்பங்கள் இருந்தன. பெரியகுளம் மற்றும் குச்சவெளி ஆகிய இடங்களில் இச் சிற்பங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் பல்லவர் அரசிலிருந்து மஹாயான பௌத்தத்தின் செல்வாக்குப் பரவிய போது தமிழர் சிற்பக் கலையின் செல்வாக்கும் பரவியது. (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா
## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

38

ஒபாமாவின் வாழ்வு அதிர்ஷ்ட தேவதையின் கையில் இருக்கிறது என்ற அவரின் எண்ணத்தை அடியோடு அவள் நிராகரித்தாள். அவரின் வாழ்வின் பொறுப்பை அவரிடமே கொடுக்கவேண்டும் என்பதில் அவள் உறுதியாக இருந்தாள்.

அவளின் நம்பிக்கையை உடைத்தெறிய வேண்டும் போலிருந்தது · ஒபாமாவுக்கு. அவள் தன் மகனோடு செய்துகொண்ட பரிசோத்னைகளனைத்தும் வெற்றி தரவில்லையென்று சொல்லிவிடவேண்டும் என்று ஒபாமா எண்ணினார்.

அப்படி சத்தம் போடாமல் சிரித்துக் கொண்டே தொடர்ந்தார். " என் நண்பன் சார்ளி நல்லாத் தான் இருக்கிறான். அவன் படிக்கவில்லை.என் தாத்தா என்ன படித்தார்? எந்தக் கல்லூரிக்குப் போனார்?"

இவ்வாறு ஒப்பிட்டுப் பேசியதும் அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. அவள் நிலைகுலைந்தவளாக இருந்தாள். அம்மப்பா மாதிரி ஒபாமாவும் ஆகிவிடுவாரோ என்பதுதான் அவள் கவலை.

" உன் தாத்தாவிலும் பார்க்க நீ கூடப் படித்தவன்" என்றாள். அவளிடம் இருந்த நம்பிக்கையொளிக்கீற்றுகள் ஒவ்வொன்றாக மறைவதை அவதானித்த ஒபாமா மெல்ல எழுந்து அவ்விடத்தை விட்ட கன்றார்.

பில்லி பாடுவதை நிறுத்திவிட்டாள். அமைதி ஆத்திரமூட்டியது. ஒபாமா வெறிமுறிந்தவராகக் காணப்பட்டார்.

மீண்டும் ஒரு கிளாஸ். குடிகாரர்கள், போதைக்கு அடிமைகள் இவர்கள் தங்கள் வாழ்வில் ஏற்படும் வெறுமையை அடிக்கடி உணர்வார்கள்.

தன் தாய்க்கு அன்று ஒபாமா சொல்ல நினைத்து, அவள் நீதி நியாயத்தில் நம்பிக்கை வைத்தது தவறு ; எதையும் நம்மால் வெற்றிகொள்ள முடியாது; உலகில் ஏற்பட்டுள்ள ஓட்டைகளை கல்வியாலோ அல்லது நல்ல எண்ணங்களாலோ அடைக்க முடியாது. அவற்றை மாற்ற அதிகாரத்தையும் அவை தரா என்பதே.



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி புஷ்ஷுடன் ஒபாமா

அன்றைய நிகழ்வு ஒபாமாவின் மனதில் குற்ற உணர்வை ஏற்படுத்திவிட்டது.

புனாகுவிலிருந்து வெளியேறி லொஸ் ஏன்ஜல்ஸில் உள்ள ஒக்சிடன்ரல் கல்லூரியில் மேல் படிப்பைத் தொடர இடம் கிடைத்தது.1979 இல் ஜிம்மி கார்டர் அமெரிக்க அதிபர். றீகன் அடுத்த அதிபராகப் போகிறார். வளாகத்தில் மாணவர்கள் எந்த வேறுபாடுமின்றிப் பழகுவார்கள். வகுப்பு முடிந்ததும் கறுப்பின மாணவர் ஒன்றுகூடிப் பேசுவார்கள். ஊர் சுற்றிப் பார்ப்பார்கள்.

எல்லோருடைய கவலையும் படிப்பு முடிந்ததும் தாங்கள் எந்த வேலையத் தேர்ந்தெடுப்பது என்பதுதான்.

ஒபாமாவுக்கு முதலாம் ஆண்டில் பல நண்பர்கள். புதிய பரிமாணம். அவர் கறுப்பின மக்கள் பலர் தங்களை மறந்து தங்கள் மேல் குவிக்கப்பட்டுள்ள இயலாமைகளை மன்னித்து வாழப் பழகிவிட்டார்கள் என்று கருதினார்.

றெஜினா– கறுப்பின மாணவி. அமைதியானவள். கடையில் கோப்பி குடித்துக் கொண்டிருந்தாள்.ஒபாமா அவள் முன்னி லையில் ஒரு புத்தகத்தைப் புரட்டிப் படித்துக் கொண்டிருந்தார்.

அவரின் நண்பன் மார்க்கஸ் 'பராக்'என்று கூப்பிட்டவாறு வந்து அவரின் கையிலிருந்த புத்தகத் தைப் பார்த்து விட்டுச் சென்றுவிட்டான்.

றெஜினாவுக்கு 'பரக்' என்ற பெயர் முதல் முறையாக காதில் விழுந்தது. அதன் கருத்தை விளக்கினார் ஒபாமா. அரபு மொழியில் 'பரக்' என்றால் "ஆசீர்வதிக்கப்பட்டவர் "(BLESSED) என்று பொருள்.

இந்தப் பெயர் தன் தந்தை தான் தனக்குச் சூட்டியது என்றும் அவர் ஒரு கென்யன் என்றும் கூறினார். றெஜினா சிக்காக்கோவில் வளர்ந்தவள். தந்தையில்லை. தாய் மிகவும் கஷ்டப்பட்டுத்தான் வளர்த்தாள்.

தங்கள் அயலவர்கள் பற்றியும், மாமன்மார்கள், ஒன்றுவிட்ட அண்ணன் தம்பிமார்

ஜம்பொன்

கள், பேரன், பேர்த்திகள் என்று பலர் கூடி மாலை வேளைகளில் சிரிப்பொலி பரவ தாங்கள் களித்திருக்கும் காலங்கள் பற்றி வர்ணித்தாள்.அவள் வர்ணனை கறுப்பின மக்களின் வாழ்வைப் படம்பிடித்துக் காட்டியது. இது ஒபாமாவின் மனத்தில் பெரிய மாற்றத்திற்கு கால்கோளிட்டது. எழுந்து செல்லும் போது றெஜினாவைப் பார்த்து ஒபாமா கூறினார்.

"உன்னைப் பார்க்க எனக்குப் பெரு மையாக இருக்கிறது" "என்ன வேடிக்கை இப்போது தான் நானும் உன்னைப் போல ஹவாயில் வாழ்ந்திருந்தால் எவ்வளவு நல்லது என்று எண்ணினேன்" என்றாள். (தொடரும்)

# பாகிஸ்தான் ஆட்சியில் நவாஸ் ஷெரீப்பின் கட்சியை இணைத்துக் கொள்ள திட்டம்



(இஸ்லாமாபாத்) பாகிஸ்தானில் கிலானி தலைமையிலான ஆட்சியில் நவாஸ் ஷெரீப்பின் முஸ்லிம்லீக் கட்சி சேர வேண்டும் என்று ஆளும் மக்கள் கட்சி வலியுறுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் சர்தாரி தலைமையிலான மக்கள் கட்சி, நவாஸ் ஷெரீப்பின் முஸ்லிம்லீக் கட்சி ஆகியவை கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைத்தன.

பிரதமர் கிலானி தலைமையிலான மந்தரி சபையில் நவாஸ் ஷெரீப் கட்சியினர் மந்திரிகளாக இருந்தனர். முஷாரப் ஆட்சிக் காலத்தில் நீக்கப்பட்ட நீதிபதிகளை மீண்டும் பதவியில் அமர்த்த வலியுறுத்தி நவாஸ் ஷெரீப் கட்சி ஆட்சியில் இருந்து விலகியது.

இப்போது இந்த பிரச்சினையில் நவாஸ் ஷெரீப் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, நீக்கப்பட்ட நீதிபதிகள் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டு விட்டனர். இதனால் பழைய படி ஆட்சியில் பங்கு கொள்ள வேண்டும் என்று சர்தாரி தலைமையிலான மக்கள் கட்சி கோரியது. இதற்கு நவாஸ் ஷெரீப் செவி சாய்க்கவில்லை.

இந்த நிலையில் பஞ்சாப் மாநிலத்தில் நவாஸ் ஷெரீப்பின் தம்பி சபாஸ் ஷெரீப் ஆட்சி, மேல் நீதிமன்றம் தீர்ப்பு காரணமாக கலைக்கப்பட்டது. பிறகு அந்த தீர்ப்பு இரத்து செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து அவர் பஞ்சாப் மாநிலத்தில் மீண்டும் ஆட்சி அமைத்தார். இந்த ஆட்சியில் மக்கள் கட்சி எம்.எல். ஏ.க்கள் பங்கு பெற வேண்டும் என்று நவாஸ் ஷெரீப் கட்சி, மக்கள் கட்சிக்கு அழைப்பு விடுத்தது.

இது பற்றி ஆலோசிப்பதற்காக பஞ்சாப் மாநில மக்கள் கட்சி எம்.எல். ஏ. க்களின் கூட்டம் சர்தாரி வீட்டில் நடந்தது. இதில் சர்தாரி, பிரதமர் கிலானி, மற்றும் மத்திய மந்திரிகள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் மத்திய ஆட்சியில் நவாஸ் ஷெரீப் கட்சி 5 நாட்களுக்குள் பங்கு கொண்டால் மட்டுமே, பஞ்சாப் மாநில ஆட்சியில் மக்கள் கட்சி எம்.எல். ஏ.க்கள் பங்கு பெறுவார்கள் என்று தீர்மானிக்கப்பட்டது.

5 நாட்களுக்குள் மத்திய ஆட்சியில் நவாஸ் ஷெரீப் கட்சி சேராவிட்டால், பஞ்சாப் மாநிலத்தில், மக்கள் கட்சி எம்.எல்.ஏக்கள் எதிர்க்கட்சி வரிசையாக உட்காருவார்கள் என்றும் தீர்மானிக்கப்பட்டது.



நவாஸ் ஷெரீப் கட்சியினருடன் இது தொடர்பாக சர்தாரி பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று பிரதமர் கிலானி கேட்டுக் கொண்டார்.

இதற்கிடையில், லாகூரில் நடந்த கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய நவாஸ் ஷெரீப், பாராளுமன்றத்தை கலைக்கவும், பிரதமரை நீக்கவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கும் 17 ஆவது அரசியல் சட்டத்தை இரத்து செய்தால் மட்டுமே மத்திய ஆட்சியில் முஸ்லிம்லீக் கட்சி பங்கு பெறும் என்று அறிவித்தார். (6-4)

## பிஜித்தீவில் இராணுவ ஆட்சி சட்டவிரோதமானது அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பு

(சுவா)


பசுபிக் பெருங்கடலில் உள்ளது பிஜித்தீவு. இந்திய வம்சாவளியினர் அதிகமாக வசிக்கும் இந்த தீவில் இராணுவ தளபதி பிராங் பைனி மாராமா தலைமையில் இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. இந்த ஆட்சி சட்டவிரோதமானது என்று அறிவிக்கக் கோரி, முன்னாள் பிரதமர் லைசேனியா குராசே உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த 3 நீதிபதிகள் கொண்ட குழு நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கியது.

இராணுவத் தளபதி சட்டத்துக்கு புறம்பாக ஆட்சியை கைப்பற்றினார். எனவே தேர்தல் நடத்தி புதிய ஆட்சி அமைக்கப்பட வேண்டும். தேர்தல் மூலம் புதிய ஆட்சி அமைக்கப்படும் வரை தற்காலிக தலைவர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். அவர் மூலம் அன்றாட நிர்வாகம் கவனிக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

பைனிமாராமா கடந்த 2006 ஆம் ஆண்டு ஆட்சியை கைப்பற்றினார். (6-4)

## உலக தரிசனம்

# ஈரானில் புதிய அணுசக்தி எரிபொருள் ஆலை திறப்பு



புதிய அணு எரிபொருள் தயாரிக்கும் ஆலை ஒன்றை ஈரானிய அதிபர் மஹ்மூத் அஹமட் நிஜாத் திறந்து வைத்துள்ளார்.

அணு ஆயுதங்களை தயாரிக்க பயன்படுத்தப்படலாம் என்று மேற்கத்தைய நாடுகளால் அச்சம் வெளியிடப்பட்டு வருகின்ற ஈரானின் உருவாக்கத்திட்டத்தில் உள்ள பாரநீர் அணு ஆலையில் பயன்படுத்துவதற்கான எரிபொருளை இந்த ஆலை தயாரிக்கும்.

ஈரான் ஒரு அணு ஆயுத சக்தியாக வருவதற்கு வழி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற ஈரானின் யுரேனிய செறிவாக்கல் திட்டத்தில் இருந்து இது முற்றிலும் வேறுபட்டதாகும். (6)

## வடகொரியாவுக்கான பொருளாதார தடை நீடிப்பு ஜப்பான் அறிவிப்பு

வடகொரியாவுக்கு ஜப்பான் ஏற்கனவே பொருளாதார தடை விதித்து இருந்தது. அது முடிவுக்கு வந்தது. இந்த நிலையில் வட கொரியா ஏவுகணை சோதனை நடத்தி இருப்பதை அடுத்து பொருளாதாரத் தடையை மேலும் ஒரு ஆண்டு நீடிப்பதாக ஜப்பான் அரசு அறிவித்துள்ளது.

இதற்கிடையே ஐக்கிய நாட்டு சபை மூலமும் வடகொரியாவுக்கு பொருளாதார தடைகளை கொண்டுவர ஜப்பான் முயற்சித்து வருகிறது. ஆனால் சீனா, ரஷ்யா நாடுகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. (6)

# விசித்திரமான நண்பர்கள்



தாய்லாந்திலுள்ள சிறிரசா மிருகக்காட்சிச் சாலையில் பன்றிக்குட்டியொன்றும் புலிக்குட்டியொன்றும் மிகுந்த நட்புணர்வுடன் பழகி பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தி வருகின்றன.

மாமிச உண்ணியான புலிக்குட்டி கொழுத்த பன்றியின் அருகே இயல்பாக படுத்துறங்குவதைப் படத்தில் காணலாம். (6-4)

# பாகிஸ்தான் தலைநகரை கைப்பற்றுவதில் தலீபான்கள் தீவிரம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஆட்சியைக் கைப்பற்றுவதில் தலீபான்கள் தீவிரமாக உள்ளனர். வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் உள்ள ஸ்வாட் பகுதியில் நிர்வாகத்தைக் கைப்பற்றி இருக்கும் அவர்கள் தங்கள் செல்வாக்கை மற்ற பகுதிகளிலும் நீடிக்க தொடங்கி இருக்கிறார்கள். நாட்டின் தலைநகர் இஸ்லாமாபத்தையும் கைப்பற்றுவோம் என்றும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

ஸ்வாட் பகுதியில் இருந்து புறப்பட்ட 400 முதல் 500 தீவிரவாதிகள் இஸ்லாமாபாத்துக்கு 100கி.மீ. தொலைவில் பர்னர் என்ற இடத்தில் உள்ள 2 கிராமங்களை கைப்பற்றினார்கள். அவர்களின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியில் லஷ்கர் தீவிரவாதிகள் ஈடுபட்டனர்.

அவர்களுடன் தலீபான்கள் 2 நாட்கள் யுத்தம் செய்தனர். அதன் பின்னே அவர்கள் அந்த கிராமங்களைக் கைப்பற்றினார்கள். இந்த சண்டையில் 8 தீவிரவாதிகள், லஷ்கர் தீவிரவாதிகள் 2 பேர், 3 பொலீஸ்காரர்கள் பலியானார்கள்.

ஸ்வாட் பகுதியில் உள்ள தலீபான் தலைவர் மவுலானா பஸ்லுல்லா தலீபான் தீவிரவாதிகளை பர்னர் நகரிலியே தங்கி இருக்கும்படி உத்தரவிட்டுள்ளார். அந்நகரில் உள்ள பல வீடுகளுக்கு தீவைத்த அவர்கள் அங்கு முகாம்களை அமைத்து உள்ளனர்.

இதற்கிடையில் பாகிஸ்தான் தலீபான் தளபதி முல்லா நஜீர் அகமது கூறுகையில், இஸ்லாமாபாத்தை கைப்பற்றுவதற்காக பல்வேறு தீவிரவாத குழுக்கள் ஒன்றாக இணைந்து உள்ளன என்ற தெரிவித்தார்.

இஸ்லாமாபாத் நகரம் எங்கள் கைகளில் வரும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று அவர் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறி இருக்கிறார். (6)

# சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட கப்டனை விடுவிக்க நடவடிக்கை

(லண்டன்)

சரக்குக் கப்பல் ஒன்றைக் கடத்தி, அதன் கப்டனை பணயக் கைதியாக பிடித்து வைத்துள்ள சோமாலியா கடற் கொள்ளையர்களுடன் பேச்சு நடத்துவதற்காக தாம் எஃப்.பி.ஐ உளவு நிறுவனத்தின் உதவியை நாடவுள்ளதாக அமெரிக்க கடற்படை கூறியுள்ளது. அந்தக் கப்பலின் ஏனைய மாலுமிகள் கடத்தப்பட்டு பின்னர் மீட்கப்பட்டதை அடுத்து, அதன் கப்டன் மாத்திரம் ஒரு படகில் பிடித்து வைக்கப்பட்டுள்ளார். அந்தகடற் கொள்ளையர்களின் நிபந்தனை என்ன, அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்று தெளிவாகவில்லையாயினும்,

அவர்கள் பணயமாக பணம் மற்றும் அவர்கள் கப்பலை பிடித்த போது நீரில் மூழ்கிய அவர்களது படகுக்காக நட்ட ஈட்டையும் கேட்கலாம் என நம்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

## இந்தோனேசியாவில் தேர்தல் கலவரத்தில் 6பேர் பலி

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் பாராளுமன்ற தேர்தல் ஓட்டுப்பதிவு நேற்று முன்தினம் நடந்தது. அதிபர் சுசிலோ பாம்பங் கட்சி உட்பட 38 கட்சிகள் தேர்தல் களத்தில் உள்ளன. 17 கோடி பேர் வர்களிக்கிறார்கள்.

தேர்தலின் போது பல இடங்களில் வன்முறை வெடித்தது. பபுபா தீவில் நடந்த கலவரத்தில் 6 பேர் பலியானார்கள். (6-4)

# வங்கியை பூட்ட மறந்த ஊழியர்கள்

(லண்டன்)

இங்கிலாந்து கேட்ஸ்ஷெட் என்ற இடத்தில் பார்க்லேஸ் வங்கி உள்ளது. இங்கு உள்ள ஊழியர்கள் வேலை முடிந்து செல்லும் போது வங்கியை பூட்டி விட்டு புறப்பட்டனர். பாதி வழியில் சென்ற போது, சாவி வைத்து இருந்த ஊழியருக்கு சில ஆவணங்களை வங்கியில் வைத்து விட்டது நினைவுக்கு வந்தது.

அவர் மீண்டும் வங்கியை திறந்து அந்த ஆவணங்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். இந்த முறை அவர் வங்கியை பூட்டுவதற்கு மறந்து விட்டார்.

இரவு முழுவதும் வங்கி கட்டடம் திறந்து இருந்தது.

மறு நாள் காலை வங்கி திறந்திருந்ததைப் பார்த்து அப் பகுதி வாசிகள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். அவர்கள் வங்கி அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்ததைத் தொடர்ந்து வங்கி அதிகாரிகள் உடனடியாக வங்கிக்கு வந்து பார்த்தபோது பணப் பெட்டி பூட்டப்பட்டு இருந்தது. அதை யாரும். உடைக்கவில்லை. என்பது தெரிய வந்தது ஆவணங்களும் பத்திரமாக இருப்பது உறுதி செய்யப்பட்டது. (6-4)

# மத்திய அரசு இதுவரையில் இலங்கையை போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தியிருக்கிறதா?

## கருணாநிதியிடம் வைகோ கேள்வி



(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் தி.மு.க. அரசுகள் செய்த துரோகத்தை தெருத் தெருவாகச் சென்று கூறுவேன் என வைகோ தெரிவித்தார். சென்னையில் நேற்று முன்தினம் ம.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டம் நடந்தது. இதைத் தொடர்ந்து அக்கட்சி பொதுச் செயலர் வைகோ நிருபர்களிடம் கூறியதாவது,

அ.தி.மு.க.வுடன் ஏற்பட்ட உடன்பாடு எங்களுக்கு திருப்தியளிக்கிறது. நாங்கள் கேட்ட தொகுதிகள் கிடைத்துள்ளன. நாங்கள் உண்மை பேசியதால் தான் பேச்சுவார்த்தை இத்தனை நாட்கள் நடந்தது.

எதிர்வரும் 16ஆம் திகதி தீவுத்திடலில் எங்கள் கூட்டணி சார்பில் பிரசார பொதுக் கூட்டம் நடக்கிறது அதில் நானும் எங்கள் வேட்பாளர்களும் கலந்துகொள்கிறோம். 17ஆம் திகதி தேர்தல் அறிக்கை வெளியிடப்படும்.

தமிழகத்தில் இரத்த ஆறு ஓடும் என நான் சொன்னது மத்திய அரசை எச்சரிக்கை செய்யத்தான்.

இந்த வாசகத்தை முதல்வர் கருணாநிதி எத்தனையோ முறை கூறியிருக்கிறார். 1965 ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலையை மறுப்டியும் தமிழ்கத்தில் ஏற்படுத்தி விடாதீர்கள் என்பதற்காகத்தான் இந்திய அரசை எச்சரித்தேன் இப்படியே போனால் இந்திய அரசும் மீது இளைஞர்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போய் விடும் சோவியத் யூனியன் சிதறுண்டு போகுமென நான் 1990ஆம் ஆண்டு திருச்சியில் நடந்த தி.மு.க. கூட்டத்திலே சொன்னேன். சொன்னது போலவே சோவியத் யூனியனின் ஒவ்வொரு மாநிலமும் தனித் தனி நாடாக சிதறுண்டு போனது.

ம.தி.மு.க வன்முறை மேல் நம்பிக்கை இல்லாத இயக்கம் எங்கள் கட்சியில் இலட்சக்கணக்கான இளைஞர்கள் இருந்தும் இதுவரை ஒரு சிறிய வன்முறையில் கூட ஈடுபட்டதில்லை. நான் பல முறை கைது செய்யப்பட்ட போதிலும் அவர்கள் ஒரு கல்லெறி சம்பவத்தில் கூட ஈடுபட்டதில்லை இனியும் அவர்கள் வன்முறையில் ஈடுபடமாட்டார்கள் என்னைக் கைது செய்யப்போவதாகக் கூறப்படும் வதந்திக்கு பதில் சொல்ல விரும்பவில்லை. பொலிஸார் விசாரணை மேற்கொண்டால் அதை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர தனி ஈழம் தான் ஒரே தீர்வு என நாங்கள் ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம்.

அதையே தான் இப்போதும் வலியுறுத்துகிறோம். விடுதலைப் புலிகளை தடை செய்ய நாடுகள் கூட இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன. ஆனால் ஏழு கோடி தமிழர்கள் வசிக்கும் தமிழகத் தின் சட்டசபையில் இயற்றப்பட்ட இலங் கை போர் நிறுத்த தீர்மானத்தை மத்திய அரசு குப்பைக் கூடை யில் வீசிவிட்டது.

இலங்கையில் போர் நடத்துவதே இந்திய அரசு ,தான் இதை இலங்கையே ஒப்புக் கொண்டிருக்கிறது. இலங்கையில் ஒரு இலட்சம் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டிருக்கின்றனர். இதற்கு மத்திய அரசை வழி நடத்திச்செல்லும்சோனியாவும் கருணா நிதியும் தான் பொறுப்பு நான் அவரிடம் கேட்பது இதுவரை மத்திய அரசு இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வ லி யு று த் தி யி ரு க் கிறதா இதற்கு அவர் நேரிடையாக பதில் சொல்ல வேண்டும் இலங்கை பிரச்சி னையில் காங்கிரஸ் தி.மு.க. அரசு செய்த துரோகத்தை தெருத் தெருவாகச் சென்று சொல்வேன் என்றார். (6)



## சென்னை உயர்நீதிமன்றம் முன்பாக சட்டத்தரணிகள் போராட்டம்

(சென்னை)

இலங்கைத் தமிழர்களை ஆதரித்தும், அவர்கள் மீது இலங்கை இராணுவத்தினர் நடத்தி வரும் தாக்குதலைக் கண்டித்தும், சட்டத்தரணிகள் சென்னை உயர்நீதிமன்றம் முன்பு போராட்டம் நடத்தினார்கள். இந்தப் போராட்டத்தின்போது பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி , மத்திய மந்திரி பிரணாப் முகர்ஜி , முதலமைச்சர் கருணாநிதி உட்பட 6 தலைவர்களின் படங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. இதுதொடர்பாக உயர்நீதிமன்ற பொலிஸார் சட்டத் தரணி பாலு, விஜயேந்திரன், புகழேந்தி, குமணராஜா, ராமசிவசங்கர், கயல்விழி உட்பட 40 பேர் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர். இவர்களில் ராம்சிவசங்கர், கயல்விழி ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர். (6)

பாரதச் செய்திகள்

## இலங்கை விடயத்தில் சகல கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்கிறது -இல.கணேசன் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் போர்நிறுத்தம் ஏற்படவேண்டும் என்பதில் எல்லாக்கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்கிறது என பாரதிய ஜனதா கட்சியின் மாநிலச் செயலர் இல.கணேசன் தெரிவித்துள்ளார்.


தென்சென்னை தொகுதி பா.ஜனதா தலைமை தேர்தல் அலுவலக கால்கோள் விழா ஆழ்வார்பேட்டையில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டதன் பின்னர் இல. கணேசன் நிருபர்களிடம் கூறியதாவது,

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் தமிழர்கள் அமைதியாக சம உரிமையுடன் வாழவேண்டும் இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள பழ நெடுமாறன் அழைப்பு விடுத்தார் .எங்கள் கட்சியும் கலந்து கொண்டது. இலங்கையில் போர் நிறத்தம் ஏற்பட வேண்டும் என்பதில் எல்லா கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்கிறது. விதி விலக்கான சில கட்சிகளை தவிர அனைவரும் தேசிய சிந்தனையுடன் உள்ளனர்.

இலங்கைத் தமிழர்களைக் காரணம் காட்டி இந்திய ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் எற்படும் வகையில் பேசுவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். தேசிய ஒருமைப்பட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் முயற்சியை பா.ஜனதா ஆதரிக்காது என்றார். (6)

## தி.மு.கவின் அறவழிப் போராட்டம் வெறும் கண்துடைப்பு நாடகமே

### விஜயகாந்த் தெரிவிப்பு



(பழநி)

இலங்கைத் தமிழர் பிரச்சினைக் காகதி.மு.க. அறவழிப் போராட்டம் நடத்துவது வெறும் கண் துடைப்பு நாடகம். முதல்வர் கருணாநிதி பதவி விலக வேண்டும் என தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. இந்திய இராணுவத்தை அனுப்பி தமிழர்களை காக்க வேண்டும். இலங்கை தமிழர் பிரச்சினைக் காக தி.மு.க. பதவிவிலகவேண்டும். அறவழிப் போராட்டம் என கருணாநிதி சொல்வது வெறும் கண்துடைப்பு தான் என்று அவர் கூறியுள்ளார். (6)

## அனுராதபுரம் சிறையில் சித்திரவதை மண்டபம் வந்த மீனவர்கள் தகவல்

(மண்டபம்)

இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்களை சிறையில் அடைத்து தூங்கவிடாமல் சித்திரவதை செய்ததாக மண்டபம் வந்த மீனவர்கள் கூறியுள்ளனர். இராமேஸ்வரத்திலிருந்து கடந்த புதன்கிழமை மீன்பிடிக்கச் சென்ற 23 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் ்கைதுசெய்து சிறப்பு முகாமில் அடைத்தனர். நேற்றுமுன்தினம் மன்னார் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய நிலையில் மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்க நீதிபதி உத்தரவிட்டார்.

இரண்டு விசைப்படகு சேதமடைந்ததால் மீனவர்களுடன், நான்கு படகையும் நேற்று முன்தினம் சர்வதேச கடல் எல்லையில் வைத்து இந்தியக் கடலோரக் காவல்படையிடம் இலங்கைக் கடற்படையினர் ஒப்படைத்தனர். நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு மீனவர்கள் மண்டபம் அழைத்து வரப்பட்டனர்.

மீனவர் மனோகரன் கூறுகையில், தனுஷ்கோடி கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படை பிடித்து அனுராதபுரம் சிறையில் அடைத்தனர். 50பேர் படுக்கக்கூடிய அறையில் இலங்கைக் குற்றவாளிகள் உட்பட 190 பேர் அடைக்கப்பட்டோம். சிறையில் தூக்கம், சாப்பாடுஎன அத்தியாவசிய தேவைகள் எதுவும் கிடைக்கவில்லை என்றார். (6)

## இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசியதாக வைகோ மீது வழக்கு பதிவு

(சென்னை)

இந்திய இறையாண் மைக்கு எதிராகப் பேசிய தாக வைகோ மீது பொலி ஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இதுதொடர்பாக காவல்துறை நேற்று முன்தினம் இரவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க மத்திய அரசை வலியுறுத்தி இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் அருகே கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பழ.நெடுமாறன், பா.ம.க.நிறுவனர் டாக்டர் ராமதாஸ், ம.தி.மு. க. பொதுச்செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் தா.பாண்டியன் ஆகியோர் கலந்துகொண்டு பேசினார்கள்.

ஆர்ப்பாட்டத்தின்போது ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ பேசும்போது, விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் மீது துரும்பு விழுந்தாலும் தமிழ்நாட்டில் இரத்த ஆறு ஓடும். பிரபாகரனை அழிக்க முடியாது. புலிகளை வெல்லமுடியர்து. இந்திய அரசு, ராஜபக்ஷவை போரை நிறுத்தச் சொல்ல வேண்டும். இல்லையேல் விபரீத விளைவுகள் இருக்கும். இந்தியா என்ற ஒரு தேசம் இருக்கப் போவதில்லை என்று கூறினார்.

மேலும் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தை வெளிப்படையாக ஆதரித்தும் அவர்களுக்கு ஆதரவு கேட்டும் இந்திய இறையாண்மைக்கு எதிராகவும் இந்திய மக்களுக்கு அரசின்பால் வெறுப்பை ஏற்படுத்தும் வகையிலும் வெளிப்படையாகப் பேசினார். இந்தப் பேச்சானது மக்களுக்கு தேவையற்ற உணர்ச்சியைத்தூண்டி அரசுக்கு எதிரான குற்றத்தை ஏற்படுத்தும் விதமாக அமைந்திருந்தது. இதுதொடர்பாக சென்னை வடக்கு கடற்கரை பொலிஸார் வைகோ மீது வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்குத் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். வைகோ கைது செய்யப்படுவார் என்று தெரிகிறது. (6)

### இலங்கை விவகாரத்தில்

## இந்திய அரசும் ஐ.நா.சபையும் தலையிட்டு யுத்தத்தை நிறுத்தவேண்டும்

### மார்க்சிஸ்ட் கட்சியின் மாநில செயலர் என்.வரதராஜன் வலியுறுத்தல்



(சென்னை)

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களைப் பாதுகாக்க இந்திய அரசு தலையிட வேண்டும் என மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் என்.வரதராஜன் வலியுறுத்தியள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில், இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையில் நடைபெறும் யுத்தத்தால் அங்குள்ள தமிழர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். 20கி.மீ. பரப்பளவில் சுமார் 2 இலட்சம் தமிழர்கள் முடக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அரசின் இராணுவத் தாக்குதலால் அப்பாவித் தமிழர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது மிகுந்த கவலையளிக்கிறது.

இந்திய அரசு தனது தூதரக உறவுகளைப் பயன்படுத்தி யுத்தத்திற்கு முடிவுகட்டி, பேச்சுவார்த்தை மூலம் தமிழர்கள் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என ஏகோபித்த குரல் எழுந்துள்ளது. ஆனால் அதன் பிறகும் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை.

மேலும் ஐ.நா. சபை தலையிட்டு இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியும், யுத்தம் நீடித்து வருகிறது.

மத்திய அரசும், ஐக்கிய நாடுகள் சபையும் தலையிட்டு யுத்தத்தை நிறுத்த வேண்டும். ஒன்றுபட்ட இலங்கைக்கு உட்பட்டு தமிழர்களுக்கு அனைத்து அதிகாரங்களையும் உள்ளடக்கிய சுயாட்சி அளித்திட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென மார்க்சிஸ்ட் கட்சி வலியுறுத்துவதாக வரதராஜன் தெரிவித்துள்ளார். (6-4)

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 7-III

### இணைந்து அனுசரித்து வாழுதல்

காலங்காலமாக சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்களை அனுசரித்து அதனுடன் இணைந்து வாழ எங்களூர் கமக்காரர்கள் தம்மைப் பழக்கிக் கொண்டுள்ளார்கள். தடயங்களேதுமின்றி மாறிவரும் சூழலுக்கேற்ப சிறப்பான விவசாயத்தை செய்யக் கற்றுக் கொண்டார்கள். சிறிய விவசாயிகள் தேவையானளவு வளங்களில்லாது பயிர்ச் செய்கையில் ஈடுபடவேண்டியுள்ளது. அவ்வாறான பயிர்ச் செய்கையை வளங் குறைந்த மண்ணில் செய்வதனால் நோய்த்தாக்கத்திற்கும் பூச்சி பீடைத்தாக்கத்திற்கும் எப்போதும் முகங் கொடுக்க வேண்டியிருக்கின்றது.

இவ்வளவிற்கும் தான் தோன்றித்தனமாக மாறிவருகின்ற சூழல் நிலைமைகளினூடாக தட்டுத்தடுமாறி செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கும் பயிர்ச்செய்கைக்கு காலனாக உணவு கொள்கைகள் அமைந்து விடுகின்றதனை பல சந்தர்ப்பங்களில் காணலாம்.

### அறுவடை செய்யும் போது இறக்குமதி செய்தல்

உதாரணத்திற்காக உருளைக்கிழங்கை தேடியெடுத்து பயிர்செய்யும் விவசாயியின் விளைநிலத்திலிருந்து அறுவடைக்கு தயார் என்ற செய்தி வரும்போது அனைத்து விவசாயியுமே சிறந்த விலைக்கு விற்றிடலாம் என நல்லதொரு கனவு கண்டிருப்பர்.

ஆனால் திடீரென உணவுக்கான கொள்கைகளில் (Policies) மாற்றங்கள் கொண்டு வரப்பட்டு கப்பல் கப்பலாக மேட்டுப்பாளையத்திலிருந்தோ, கொலன்ட்டிலிருந்தோ அல்லது தென்பகுதியிலிருந்தோ தருவிக்க தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டு இரு தினங்களுக்குள் யாழ். குடாநாட்டு சந்தைகளில், கடைகளில் இன்னும் வீடுகளில் வெளி கிழங்கு விலை குறைந்து விற்பனைக்கு வந்துவிடும். கனவு கண்ட விவசாயியின் தலையில் மண்ணை வாரியிறைக்கும் இச்செயல் நீண்ட காலமாகவே நடைமுறையிலிருக்கின்றது.

இப்போதெல்லாம் "காற்றுள்ள போதே தூற்ற வேண்டும்" என்னும் முது மொழியெல்லாம் எடுபடுவதேயில்லை. காற்று வரும் என காவல் இருந்து தூற்ற நினைக்கும் கமக்காரனை நின்ற காற்றுடன் அள்ளுண்டு வரும் புயற்காற்று அனைத்தையும் நாசமாக்கிச் செல்வதையே பார்க்கலாம்.

காலநிலை மாற்றத்தின் வேகமும் அதன் ஆதிக்கத்தினால் பெறப்படும் விளைவுகளுமாக சூழலில் ஏற்படுத்தும் மாற்றங்களை, குறிப்பாக குறுகிய அல்லது நீண்ட தற்காலிகமான வரட்சித்தன்மை, புயல், இடிமழை மற்றும் வெள்ளம் போன்றவற்றை உள்வாங்கியதாகவே பயிர்ச்செய்கை செய்யப்பட வேண்டியதாயுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் கமக்காரர்கள் அந்தந்த நேரத்தில் ஏற்படும் திடீர் வெள்ளம் போன்றவற்றிற்கு ஈடு கொடுத்து வாழ கற்றுக் கொள்ளல் சிறந்தது.

### நிஷா புயல் - நல்லதொரு உதாரணம்

2008 இனது கடைசி மாதங்களில் ஓங்கியடித்து எழுந்து ஓய்ந்த 'நிஷா' புயலினது தாக்கத்தை அனைவரும் உணர்ந்திருக்கின்றோம். எங்கிருந்து வந்தது? எப்படி வந்தது? புயல் உருவானதற்கான விளக்கமும் பிந்தியே வந்தது!




இவ்வாறான இயற்கையின் சீற்றத்தை, தான் தோன்றித்தனத்தை, சரியாக முன்கூட்டியே அனுமானிக்க முடியவில்லை. எமது காலநிலை அவதான நிலையத்திலிருக்கும் வசதிகள் போதாமை இதற்கொரு காரணமாகும். புதிது புதிதாக துல்லியமாக முன்கூட்டியே அளவீடுவதற்காக கருவிகளின் உதவி இங்கே தேவைப்படுகின்றது.

### காலநிலை மாற்றம் பற்றிய கல்வி அவசியம்!

காலநிலை பற்றிய கல்வி (Climatology) பற்றிய தேவை தற்போது எழுந்துள்ளது. எங்களூர் விவசாயிகளுக்கும் இது பற்றிய அறிவை வழங்கிடுதல் நன்று. விவசாயம் கற்கும் மாணவர்களுக்கும் காலநிலையை அவதானிக்க, அனுமானிக்க செயன்முறை களினூடான பயிற்சிகளுடன் இணைந்த பாட அலகுகள் உட்புகுத்த வேண்டும்.

வெள்ளி (நட்சத்திரங்கள்) பார்த்து காலநிலையை அனுமானித்தவர்கள் எம் முன்னோர்கள். அண்டத்தில் வலம்வரும் நட்சத்திர கூட்டங்களின் ஒழுங்கமைப்பினை வைத்துக் கொண்டு எதிர்வு கூறும் திறமைசாலிகள் இவர்கள். கணித்து கூறும் கருவி பொய்த்தாலும் இவர்களின் வாக்கு பொய்க்காது.

காலநிலை மாற்றங்கள் எதிர்வு கூறுவது ஒரு கலை. தமிழ் நாட்டின் தென்பகுதியில் ஏற்படும் தாழமுக்கம் தென்பகுதி மாவட்டங்களில் மழையாகி கொட்டித்தீர்த்து பின் வழி தவறி யாழ். குடாநாட்டிற்கு மேலாக கடக்கும் போது பெருமழையாக மாறி வெள்ளம் பாய்ந்தோட வைத்து விடும். வங்கக்கடலில் தாழமுக்கம் ஏற்படுவதை தமிழ்நாட்டிலுள்ள வானிலை அவதானிப்பு நிலையம் சிறப்பாக செயற்பட்டு சரியான எதிர்வு கூறியதால் அதனையறிந்து எம்மில் பலர் தம்மை முன்கூட்டியே தயார்படுத்தியதால் தப்பியிருந்தனர். அப்படியொரு உறவுப் பாலம் தமிழ்நாட்டுக்கும் எமக்கும்.

### காலநிலை மாற்றங்களை அனுசரித்து புதிய இலகு தொழில் நுட்பங்களை புகுத்துதல்

பசுமையில் இன்னொரு புரட்சி தொழில் நுட்பங்களைத் தங்கியிருக்கின்றது. புதிய இலகு வகை தொழில் நுட்பங் களை வேளாண் செய்கையில் புகுத்துவதன் மூலம் எவ்வகையான காலநிலை மாற்ற மென்றாலும் வேளாண்மை தாக்குப் பிடிக்கும் தன்மையை உருவாக்க வேண்டும். இங்கே இலகு தொழில் நுட்பங்களின் பயன்பாடு தேவையாயிருக்கின்றது.

பாரிய அளவிலே ஆறுகளை செப்பனிடுதலும் (குறிப்பாக வழுக்கை யாற்றை உதாரணமாக்கலாம்) சிறிய



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

அளவில் மழையை முழுமையாக நம்பியிருக்கும் தன்மையை மாற்றி நிலத்தடி நீரை சிறப்பாக, மிகவும் சிக்கனமாக பயன்படுத்தியும் வேளாண்மையை விருத்தி செய்யலாம். கஞ்சத்தனம் எதிலிருக்கின்றதோ இல்லையோ நிச்சயமாக நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதில் இருக்கவே வேண்டும். சும்மா கிடைக்கும் நீர் தான் என ஊதாரித்தனம் செய்தலாகாது.

புதிய இலகு தொழில் நுட்பங்கள் என குறிப்பிடும் போது பயிர்ச் செய்கையில் பயன்படுத்தும் அனைத்து முன்மாதிரியான விஞ்ஞான முறைகளினூடான செயல் முறைகளைக் கூறலாம். மண்புழு வளர்ப்பு, மண்புழு கூட்டுரம் தயாரித்தல், இவற்றின் மூலமாக மண்ணிலுள்ள சேதனப் பொருளினளவை மேம்படுத்துதலில் இருந்து இவை போன்ற பலவற்றை உதாரணமாக்கினாலும் அவை பற்றி இன்னொரு இடத்தில் விரிவாக நோக்கலாம்.


எங்களூர் விவசாயிகளுக்கு தேவையான நாமறிந்த அனைத்து புதிய இலகு தொழில் நுட்பங்களையும் இத் தொடரினூடாக தங்களுக்கு தருவதில் மகிழ்ச்சியடைகிறேன். (தொடரும்)

# சேதன விவசாயம் காலத்தின் தேவை 2



சேதன விவசாயத்தின் அடிப்படை எண்ணக்கரு நீடித்து நிலைக்கும் விவசாயம் (Sustainable agriculture) என்பதாகும். மனிதர்கள் இந்த பூமியின் பொறுப்பை தமது கையில் எடுத்த பிற்பாடு அதை பாதுகாப்பது அவர்கள் பொறுப்பாகின்றது. எமது வழமையான விவசாயத்தில் ஒவ்வொரு பிரச்சனைக்கும் ஒரு தீர்வு உண்டு. அது இரசாயனங்களாலேயே ஆனது. ஆனால் சேதன விவசாயத்தில் எல்லா பிரச்சனைகளுக்குமான தீர்வுகள் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை. அதாவது பல்வேறு இடைத்தாக்கங்களை பயன்படுத்தி இறுதி இலக்கை அடைதல் எனக் கூறலாம்.

சுலபமாகச் சொன்னால் பனை மரத்தில் தேள் கொட்டுவதற்கும் தென்னை மரத்தில் நெறி போடுவதற்கும் தொடர்பு உண்டு. பனையில் தேள் கொட்டாமல் இருக்க தென்னையையும் கவனிக்க வேண்டும். இந்தப் புதிரில் ஏதாவது பிடிபடுகின்றதா?




எல்லாம் சரி நாங்கள் வைத்திருக்கும் சின்னஞ்சிறிய துண்டுக்காணிக்கு உது சரியாக இருக்குமா? என்று முணுமுணுப்பது நன்றாக கேட்கிறது. எமது பெரும்பாலான விவசாயிகள் சிறிய அளவிலேயே உற்பத்தி செய்து உள்ளூர் சந்தைகளில் விற்கிறார்கள். (பெரும்பாலும் அறா விலையில் அதுவும் இடைத்தரகர்களுக்கு) அது மொத்த உற்பத்தியின் போட்டி போட முடியாத மிகச் சிறிய பகுதியாக இருக்கும். இதற்காக கடன்பட்டு அதிக விலையில் பீடை நாசினிகள், உரங்கள் என்பவற்றை வாங்குகிறார்கள். ஆனால் சேதன விவசாயத்தின் மூலம் குறைந்த உள்ளீட்டுடன் அதே பலனைப் பெறமுடியும்.

சேதன விவசாயத்தின் அழகு என்னவென்றால் அது உள்ளூரில் கிடைக்கின்றவற்றை பயன்படுத்தி செய்யப்படுவது. அதாவது ஓரிடத்தில் இயற்கையாக உள்ள எதையும் அழிக்காமல் அவற்றின் நன்மைகளைப் பெற்றக் கொள்வது. இதனைத்தான் சேதன விவசாயம் தூய்மை (holistic) வாய்ந்தது என கூறப்படுகிறது.

இனிமேல் நாங்கள் எவ்வாறு சேதன விவசாயம் இயங்குகிறது என்று பார்ப்போம். சேதன விவசாயம் பற்றி படிக்க வேண்டுமானால் எமது அப்பு, ஆச்சி காலத்துக்கு போக வேண்டும். அங்கிருந்து தான் ஆரம்பிக்க வேண்டும்.

முதலில் நாங்கள் நாள் பார்த்து நடவு செய்வதில் இருந்து தொடங்குவோம். இந்த பிரபஞ்சம் முழுவதும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டது.(Cosmos) என்பதை நாமெல்லோரும் அறிவோம். உங்களில் இருந்து எழும் சின்ன அதிர்வு. இந்தப் பிரபஞ்சம் முழுவதும் பரவும் என்பதை நம்புகிறீர்களா? நம்பித்தான் ஆகவேண்டும். நாங்கள் புத்திசாலிகளாக, நவீன தொழில் நுட்பம் தெரிந்தவர்களாக வந்து விட்டோம். எனினும் நாங்கள் இந்த விடயத்தை கவனிப்பதில்லை. சூரியனில் இருந்து வருகிற சக்தி பிரவாகத்தால் இந்த பூமி இயங்குகிறது.

அதே போல பல கோடி நட்சத்திரக் கூட்டங்களிலும் இருந்து பிரபஞ்சம் முழுவதும் பாய்கின்ற சக்தி அலைகள் (Cosmic forces) பூமியிலுள்ள ஒவ்வொரு தாவரத்தையும் விலங்கையும் அடையும். எமது சூரியக் குடும்பத்தில் உள்ள எல்லாம் ஒன்று இன்னொன்று சார்பாக மாறா விதத்தில் அசைந்து கொண்டிருக்கின்றன.

எனவே கொஸ்மிக் அலைகளும் குறித்த ஒழுங்கான ஆவர்த்தனத்திலேயே பாய்கிறது. இதில் பூமிக்கு மிக அணித்தாகவுள்ளவை சூரியனும் சந்திரனுமே. இவை கொஸ்மிக அலைகளை வாங்கி அதனை பூமிக்கு தெறிப்படையச் செய்கின்றன. இவ்வகைகள் பூமியில் உள்ளவற்றின் இயல்புகளைத் தீர்மானிக்கின்றன. சந்திரன் தான் பூமிக்கு மிகவும் கிட்ட உள்ளது. எனவே தான் எமது முன்னோர்கள் சந்திரனின் அசைவுடன் விவசாயத்தை இணைத்தார்கள். உதார ணமாக குறித்த கணத் திலே நாட்டப்படுகின்ற விதை எந்த விதமான சக்தியைப் பெறுகிறதோ அவ்வகையான தாவரம் உருவாகிறது.

ஆகவே வீரியமான சக்தி அலைகள் உள்ள பொழுது நாட்டப்படுகின்ற விதைகள் வீரியமாக வளரும். அச்சக்தி ஆனது உணவின் ஊடாக எமக்கும் கிடைக்கும். சமகாலத்தின் பெரும்பாலான உணவுப் பொருட்கள் இரசாயனங்களின் துணையுடனேயே பிறப்பிக்கப் படுகின்றது. இவ் உணவுடன் குறைந்தளவான நஞ்சையே உள்ளே எடுக்கிறோம்.

Maria Thun என்ற ஜெர்மனியைச் சேர்ந்த பெண் ஆராய்ச்சியாளர் 40 வருடமாக சந்திரனுடைய விளைவுகள் தாவரத்தில் எவ்வாறு இருக்கும் என்பதை விளக்குவதற்காக ஆராய்ச்சி செய்து அதிலிருந்து கூடிய விளைச்சலைப் பெறுவதற்கான ஒரு நாட்காட்டியையும் கண்டு பிடித்தார். (அது இப்பொழுது பெருமளவில் புழக்கத்தில் உள்ளது)

நாங்கள் கொஸ்மிக் சக்தியை கண்ணால் காணாவிட்டாலும் ஒரு நல்ல நம்பிக்கையுடன் அதை பின்பற்றுவோம். எழுந்தமானதாக நடுவதில் என்ன கிடைத்து விடப் போகிறது. நடுவது என்றில்லை எல்லாவற்றையும் நாள் பார்த்த செய்வது நல்லது தான்.

உலகின் பல பகுதிகளிலும் பொதுவாக பின்பற்றப்பட்டு வரும் பாரம்பரியம் ஒன்று என்னவென்றால் பௌர்ணமிக்கு முதல் 2-3 நாட்களில் விதை நடுகையோ நாற்று நடுகையோ செய்தலாகும். இதனுடைய அடிப்படை என்னவென்றால் விதைகள் நிறைய நீரை அகத்துறிஞ்சும் அதேவேளை பௌர்ணமி நாட்களை தவிர்ப்பதன் காரணம் என்னவென்றால் பின்னர் அதன் தேய்வு ஆரம்பமாகி விடுகிறது.

ந. திலீபன்
விவசாய உயிரியல் (சிறப்பு)
தகவல் தொடர்பு மையம்
விவசாய பீடம்

இவற்றையெல்லாம் அலசி ஆராய்வதன் நோக்கம் சிறந்த வீரியமான விளைவைப் பெறுதலும் பீடைக் கட்டுப் பாட்டை இலகுவாக மேற்கொள்வதற்குமேயாகும்.

சேதன விவசாயம் அறிவை அடிப்படையாகக் கொண்டது. தற்போதைய விவசாயம் மூலதனத்தை அடிப்படையாகக் கொண்டது. (காசு போட்டு காசு எடுக்கும் வித்தை) நாம் இப்போது இரண்டிற்கும் இடையிலே நிற்கிறோம். புரிகின்றதா?

(தொடரும்)

பொய்கள் ஈக்கள் போல இரைகின்றன. ஆனால் சத்தியத்தில் சூரியப் பிரகாசம் உண்டு.

– ஆபிரிக்கா

வலம்புரி

## ஈழத்தமிழர் விடயத்தில் இரட்டைவேடம் போடும் சர்வதேச சமூகம்

வன்னியில் நாள்தோறும் மனித உயிர்கள் பலியெடுக்கப்படுகின்றன.

உலக நாடுகள், சர்வதேச அமைப்புகள் எவற்றின் கோரிக்கைக்கும் செவி சாய்க்காமல் மனித உயிர்கள் பறிக்கப்படுகின்றன.

இந் நிலைமைகளை பார்க்கும்போது ஒன்றில் உலக நாடுகள் –ஐ.நா. சபை உள்ளிட்ட பொது அமைப்புகள் ஈழத்தமிழர் விடயத்தில் இரட்டை வேடம் போடுகின்றன என்ற முடிபுக்கு வரவேண்டும்.

அல்லது உலக நாடுகள் அனைத்தும் இலங்கை அரசுக்குப் பயந்துபோயுள்ளன என்ற தீர்மானத்திற்கு வரவேண்டும். இதில் சாத்தியமானது எது?

உலக நாடுகள் அனைத்தும் இலங்கை அரசுக்குப் பயந்துபோயுள்ளன என்ற முடிபு ஏற்புடையதல்ல.

ஆக, ஈழத்தமிழர் விடயத்தில் சர்வதேச சமூகம் இரட்டை வேடம் போடுகிறதென்பது தெளிவாகின்றது.

சர்வதேச சமூகம் இரட்டைவேடம் போடவில்லை என யாரேனும் மறுப்பார்களாயின், அவர்களிடம் முன்வைக்கப்படும் முதல்வினா, அப்படியானால் இலங்கையில் இடம்பெறும் யுத்தத்தை உலக நாடுகள் ஏன் நிறுத்தவில்லை?

இந்த வினாவுக்கான பதில் மௌனமாகவே இருக்கும்.

அதேவேளை இலங்கை அரசு நடத்தும் யுத்தத்திற்கான ஆயுதங்கள் இந்நாட்டில் தயாரிக்கப்பட்டவையல்ல. அவ்விதம் அந்த ஆயுதங்கள் இந்த நாட்டில் தயாரிக்கப்பட்டால் அதன் நிலைமை எவ்வாறாக இருக்கும் என்பதை மனித மொழியில் கூறவேண்டிய அவசியம் இல்லை.

சர்வதேச நாடுகள் இலங்கைக்கு ஆயுதங்களை வழங்குகின்றன.

அண்டை நாடான இந்தியா; ஆயுதம் மற்றும் இராணுவப் பயிற்சி, தகவல் பரிமாற்றம் என்ற பல்பரிமாணங்களில் உதவி வழங்கிவருகின்றது.

நடைபெறும் யுத்தத்தில் அரசின் வெற்றிக்கு இந்தியாவின் பங்கு காத்திரமானது– முதன்மையானது என இலங்கை நாடாளுமன்றத்தில் அமைச்சர் ஒருவர் கூறியிருப்பது இங்கு நோக்குதற்குரியது.

வன்னியில் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றனர் என்றவுடன் ஐ.நா. சபை வந்து குதித்து அப்பாவித் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டாமா?

பல்லாயிரக்கணக்கான மக்கள் பலியாகிக் கொண்டிருக்கும் போது பிரிட்டன் தொடர்ந்தும் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்துமாம். ஐ.நா. கவலை தெரிவிக்குமாம். எல்லாமே போலித்தனம்.

வல்லாதிக்க நாடுகளிடம் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு ஐ.நா. சபை பெயரளவு அமைப்பாகவுள்ளது.

வல்லாதிக்க நாடுகளுக்கு இலங்கைத் தமிழர்களின் மரணம் எலி செத்ததுபோல் இருக்கும் அவ்வளவுதான்.

# போர் நிறுத்த உடன்படிக்கை குறித்து ஜனாதிபதியுடன் பகிரங்க விவாதம் நடத்த தயார்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு




(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கையின் மூலம் நாட்டிற்கு துரோகம் இழைத்து விட்டதாக ஆளும் கட்சியினர் குற்றம் சுமத்தி வருவதாகவும், இந்த விடயம் குறித்து பகிரங்க விவாதமொன்றை நடாத்த ஜனாதிபதி முன்வர வேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த சவாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டால் சர்வதேச சட்டங்களுக்கு அமைய விவாதத்தை நடத்த முடியும் எனவும், அவ்வாறு இல்லாதது அவர் அதனை புறக்கணித்தால் அது ஜனாதிபதியின் கோழைத்தனமாகவே கருதப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேல் மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளருக்கு விளக்கமளிக்கும் வகையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆட்சிக்கு வந்து நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் மேல் மாகாண சபைக்காக இந்த அரசாங்கம் எதனையும் செய்யவில்லை எனவும் தமது பிழைகளை மூடி மறைத்துக் கொள்ளும் நோக்கில் வரலாற்று துரோகம் என புதுக்கதைகளை அவிழ்த்துவிடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



யுத்த நிறுத்த உடன்படிக்கை பிழையானதெனத் தெரிவித்து தமக்கு தண்டனை வழங்கப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்ளத் தயார் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ரவூப் ஹக்கீம், டலஸ் அழகப்பெரும, மிலிந்த மொரகொட, ஜீ.எல்.பீரிஸ், ஆறுமுகன் தொண்டமான், சந்திரசேகரன் உள்ளிட்டோருக்கும் சிறைத் தண்டனை வழங்கப்படவேண்டும் னவும் யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலாக்கலுக்கு குறித்த அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்கியிருந்ததாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (6)

# பொதுமக்கள் மீதான எறிகணை தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்

## மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்து

(கொழும்பு)

பொதுமக்கள் மீதான எறிகணைத் தாக்குதல்களை அரசாங்கம் உடனடியாக நிறுத்தவேண்டுமென மனித உரிமை கண்காணிப்பகம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சுமார் ஒரு இலட்சம் பொதுமக்கள் சிக்கியிருப்பதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை நிலவரம் குறித்து ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை விரைந்து செயற்படவேண்டுமெனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது. அரசாங்கம் மற்றும் விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்படும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நோக்கில் விசேட பிரதிநிதியொருவரை ஐக்கிய நாடுகள் அமைப்பு அனுப்பி வைக்கவேண்டுமென குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வலயம் உலகின் மிக ஆபத்தான பிரதேசங்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளதென மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்தியப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெறும் உயிரிழப்புக்களை தடுத்து நிறுத்த ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததென குறிப்பிட்ட அவர் யுத்தக் குற்றச் செயல்களைப் புரிவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் தார்மீகப் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார். (6)

# சர்வதேச குரலை கேட்காது விடின் பாரிய இரத்தக்களரி ஏற்படும்

## இடதுசாரி முன்னணி எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் உடனடியாக யுத்த நிறுத்தத்தை அறிவிக்க வேண்டுமென உலகமே அழுத்தம் கொடுக்கின்ற போதும் அரசாங்கம் காது கேளாதது போல இருப்பது பாரிய இரத்தக் களரியை ஏற்படுத்தும் என இடது சாரி முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இடதுசாரி முன்னணியின் அமைப்புச் செயலாளர் சமல் ஜயநித்தி மேலும் தெரிவிக்கையில்,

வன்னியில் தமது சொந்த இடங்களிலேயே மக்கள் வாழ்கின்றனர். விடுதலைப்புலிகளோடு இரண்டு இலட்சம் மக்கள் வாழ்கின்றனர்.

எனவே அம் மக்களை அங்கிருந்து வெளியேற்றுவதென்பது மனிதாபிமான நடவடிக்கை அல்ல.

உலகமே இந்த யுத்தத்தை நிறுத்துமாறு வலியுறுத்துகையில் அரசாங்கம் மௌனம் காப்பதோடு மக்களை மீட்பதற்கு இராணுவ நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவிக்கின்றது.

இவ்வாறான இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் ஹிரோஷிமாவில் ஏற்பட்ட அழிவை விட பாரிய மனித அவலம் ஏற்படும்.

எனவே அரசாங்கம் உடனடியாக யுத்த நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும்.

அத்தோடு இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்கி தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்க வேண்டும் தத்தமது சொந்த இடங்களில் வாழும் உரிமையை தமிழ் மக்களுக்கு வழங்கவேண்டும் இல்லாவிட்டால் இப் பிரச்சினை தொடரத்தான் செய்யும்.

உலகின் யுத்த நிறுத்த வலியுறுத்தத்தை வரவேற்கின்றோம். இது தொடர வேண்டும் தமிழ் மக்களை பாதுகாக்க முன்வர வேண்டுமென்றும் சமல் ஜயநித்தி தெரிவித்தார். (6)

## சுவாமி விவேகானந்தரின் வீர முரசு பலம்



உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும், அதைப் பின்பற்றிச் செல். கருத்துக்களை வாதத்திற்கு எட்டும் தொலைவரைச் செலுத்தி, முடிவுகளைப் பெறுக. கோழையும் வேடதாரியும் ஆகிவிடாதே.

நாம் நலன் நோக்கும் இயல்பை வளர்த்து ஒவ்வொன்றிலும் இருக்கும் நன்மையைக் காண முயலவேண்டும். நமது உடல்களிலும் மனங்களிலும் உள்ள குறைகளை நினைத்து, உட்கார்ந்து துயரப்பட்டால் நமக்கு அதனால் பயன் ஒன்றும் விளையாது. மாறான நிகழ்ச்சிகளை அடக்குமாறு செய்யும் வீர முயற்சியே நமது ஊக்கத்தை மேல் நோக்கிச் செலுத்தும்.

# உலக பொருளாதார நெருக்கடியானது இலங்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்

## அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

உலக பொருளாதார நெருக்கடி இலங்கையைக் கடுமையாக பாதிக்கும் நிலைமையே காணப்படுகின்றது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி இவ்வருடம் பாரிய வீழ்ச்சியைக் காணும். எனவே, அதற்கு முகம் கொடுக்க நாம் தயாராகவேண்டும் என்று வர்த்தகம் மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடிக்கு இலங்கை எல்வாறு முகம் கொடுக்கும் என்று வினவிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், சர்வதேச பொருளாதார நெருக்கடி காரணமாக பல நாடுகள் தொழிலாளர்களைப் பணி நீக்கம் செய்துவருகின்றன. இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையை இழக்கும் நிலைமை உருவாகியுள்ளது. ஆனால் எமது நாட்டில் இலட்சக்கணக்கான தொழிலாளர் வேலை இழக்கும் நிலைமை இதுவரை ஏற்படவில்லை.

எனினும், உலகப் பொருளாதார நெருக்கடியானது நிச்சயம் இலங்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். அதன் பிரதிபலனை இவ்வருடத்தின் இறுதியில் எம்மால் காண முடியும். நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஒருபோதும் இல்லாத அளவுக்கு வீழ்ச்சியைக் காணும். மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் கூறியது போன்று பொருளாதார வளர்ச்சி வீதம் 2.5 வீதத்துக்கு குறையும் அபாயம் உள்ளது.

உலகளாவிய பொருளாதார கட்டமைப்பு அனைத்து நாடுகளுடனும் தொடர்புபட்டுள்ளது. அனைத்து நாடுகளும் பொருளாதார செயற்பாடுகளில் ஏனைய நாடுகளின் உதவியை நாடுகின்றன. அந்த வகையில் இலங்கை மட்டும் அதற்கு விதிவிலக்காக இருக்க முடியாது. எனவே இவ்வருடம் ஏற்படப்போகும் பொருளாதார நெருக்கடிக்கும் முகம் கொடுக்க நாம் தயாராக வேண்டும்.

உள்நாட்டில் வெறுமனே உற்பத்தியை அதிகரிப்பதில் மட்டும் அர்த்தம் இல்லை. உற்பத்தி செய்து விட்டு அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாவிடின் பயனில்லை. தற்போதைய நிலைமையில் உற்பத்திகளை ஏற்றுமதி செய்ய முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. எனவே, எமது நாட்டில் உற்பத்தி செய்பவற்றை நாமே பயன்படுத்தக் கூடிய வகையில் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதுதான் தற்போதைய தேவை. இலங்கையின் பணவீக்கம் 5.3 ஆக குறைந்துள்ளது. இது ஆரோக்கியமான நிலைமையாக காணப்படுகின்றது. ஆனால் எதிர்வரும் மாதங்களில் பொருளாதார நிலைமை எவ்வாறு மாற்றமடையும் என்று கூற முடியாது. (6)

# அம்பாறையில் 26 தமிழர்கள் கைது

(கொழும்பு)

கிழக்கின் கல்முனை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவுகளில் கடந்த செவ்வாய்க் கிழமையன்று விஷேட அதிரடிப்படையினரும், பொலிஸாரும் இணைந்து நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது 26 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

இத்தேடுதலின் போது சுமார் 100 பேர் வரையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இதில் பாண்டியிருப்பு பிரதேசத்தில் 21 பேரும், சம்மாந்துறையில் உள்ள வளர்த்தாப் பிட்டியில் ஐவரும் கைது செய்யப்பட்டனர். (6)

# உள்ளூராட்சி சபை சட்டமூலத்தில் திருத்தத்தை மேற்கொள்ள ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடத்துவதற்காக உள்ளூராட்சி சபைத்தேர்தல் சட்டமூலங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் பிரகாரம் சட்ட மூலம் எதிர்வரும் 21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதுகாப்பு வலயம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் புலிகளிடமிருந்து மீட்கப்பட்டதை அடுத்தே அங்கு முதலில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. சட்டமூலத்தில் திருத்தங்கள் மேற்கொண்டதன் பின்னர் அங்கு உள்ளூராட்சி சபைத்தேர்தல் நடத்தப்படும்.

இதேவேளை வடக்கில் உள்ளூராட்சி சபைத்தேர்தலை நடத்துவதற்காக கோரப்பட்டிருந்த வேட்புமனுக்கள் முழுமையாக இரத்து செய்யப்பட்டதன் பின்னரே அங்கு தேர்தலை நடத்துவதற்கான வேட்பு மனுக்கள் கோரப் படும்.

21 ஆம் திகதி அந்த சட்ட மூலத்தை சபையில் சமர்ப்பித்து திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகளை உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முத லில் நடத்தப்பட்டு அதற்கு பின்னர் வடக்கு மாகாண சபைத்தேர்தலும் நடத்தப் படும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது. (6)

# இலங்கையை ஒரு டிஜிட்டல் சமூகமாக மாற்றவேண்டும்

## விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையை ஒரு டிஜிட்டல் சமூகமாக மா ற்ற வேண்டுமென்பதில் அரசாங்கம் ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் உள்ளதாக விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் கொழும்பு ஹில்டன்ஹோட்டலில் இடம் பெற்ற உலகத் தொடர்பாடல் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்

சமூக மற்றும் பொருளாதார அடிப்படைகளில் ஏற்கனவே வியாபித்திருக்கும் இலங்கையின் அடுத்த பரம்பரை. வலய அமைப்பு மூலம் பெறப்படும் அனுகூலங்களின் அடிப்படையில் டிஜிட்டல் சமூகமாக மாற்றப்பட வேண்டும் என்பதில் அரசாங்கமும் மற்றும் உள்நாட்டு தொலைத் தொடர்பாடல் கம்பனிகளும் ஆர்வத்துடன் செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

உள் நாட்டு தொலைத் தொடர்பாடல்களின் போதான இதனது அமுலாக்கத்தின் மூலம் ஒரு வலையமைப்பு ஒரு சேவை எனும் கருத்திலிருந்து மாற்றமடைந்து இணைய நெறி முறையினை அடிப்படையாகக் கொண்டு ஒரு வலையமைப்பின் மூலம் பல்வேறு தரப்பட்ட சேவைகள் வழங்குதல் என்னும் கருத்தியலாக மாற்றம் பெற்றுள்ளது.

குரல் வழி தரவு மற்றும் ஏனைய ஒன்றிணைக்கப்பட்ட சேவைகள் போன்ற அனைத்துரக சேவைகளையும் தனிப் பொதி அடிப்படையிலான இவ் ஒன்று குவித்த வலையமைப்பின் மூலம் வழங்குவதே அடுத்த பரம்பரை வலையமைப்பு இன் திட்டமாகும்.

இதன் மூலம் நிலையான தொலை பேசிகள் கைத்தொலை பேசிகள் மற்றும் கணனிகளைப் பயன்படுத்தி பாவனையாளர் ஒருவர் எந்த ஓர் இடத்திலிருந்தும் தனது தனிப்பட்ட விபரங்களுடன் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார். (6-4)

# சு.க.தூதுக் குழு சீனாவிற்கு விஜயம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தூதுக் குழுவொன்று சீனாவிற்கு விஜயம் செய்துள்ளது. சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவினரே அங்கு விஜயம் செய்துள்ளனர்.

சீன கம்யூனிஸ்ட் கட்சி விடுத்த அழைப்பின் பேரில் அங்கு சென்றுள்ள சுதந்திரக் கட்சியின் தூதுக் குழு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்களை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளது.

அமைச்சர் தலைமை யிலான குழுவில் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியும் சென்றுள்ளார். (6)

# விலைகுறைப்பு என்ற மாயைக்குள் மக்களை மூழ்கடிக்கும் அரசு

## ரவி கருணாநாயக்க எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

விலை குறைப்புகள், நிவாரணங்கள் என்ற மாயைக்குள் மக்களை மூழ்க டித்து சர்வாதிகார ஆட்சியை அரசாங்கம் வளர்த்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டார்.

யுத்த வெற்றிகளை முன்னிறுத்தி தேர்தல்களில் வெற்றி பெற்று தமது ஆட்சிக் காலத்தை கபடத்தனமாக முன்னெடுத்துச் செல்லும் அரசாங்கம் விரைவில் பொது மக்கள் முன் மண்டியிடும் எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பாக தெளிவுபடுத்துகையிலேயே ரவி கருணாநாயக்க மேற் கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கூறுகையில்,

ஜே.வி.பி ஆதரவாளரின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் தெரிந்தும் , இது வரையில் கைது செய்யப்படாமையானது கொலைகளின் பின்னணியில் அரசாங்கம் உள்ளதனையே சுட்டிக் காட்டுகின்றது.


ஏனைய அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் அச்சுறுத்தியும் கொலை செய்தும் அரசாங்கம் ஆட்சியைக் கொண்டு செல்கின்றது.



பொது மக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணங்கள் அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்புக்களை நேர்மையாக வழங்காது. புதிய வரி விதிப்புகள் மூலம் அரசையே போஷனைப்படுத்துகின்றது. கடந்த காலங்களில் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட பொருட்களின் விலை குறைப்புகள் உண்மைக்கும் நேர்மைக்கும் முரணானவை.

தேர்தல்களும் கூட முற்றாக ஜனநாயகத்திற்கு முரணானதாகவும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகவுமே உள்ளது எதிர்க் கட்சிகள் தமது தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத அளவிற்கு அரசாங்கத்தின் வன்முறைகள் தலை தூக்கியுள்ளன.

ஆனால் ஐ.தே.க ஒரு போதும் அரசின் கபடத்தனத்திற்கு சிக்காது எனவும் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டார். (6-4)






யு.என்.டி.பி நிறுவனத்தின் அனுசரணையுடன் வலி. மேற்கு பிரதேச செயலகத்தினூடாக பாண்டவெட்டை மக்களுக்கு வாழ்வாதாரத்திட்டம் ஆரம்பிக் கப்படவுள்ளது.

இது தொடர்பான கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதேச செயலர் திருமதி வேதநந்தினிபாபு, J/174 கிராம அலுவலர், யு.என்.டி.பி. நிறுவனத்தின் இலங்கைக்கான நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் டக்ளஸ் கேய் பியாட்டே, யு.என்.டி.பியின் யாழ் மாவட்ட பொறுப்பாளர் நிசாந்தன் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

# கலிஸ்-டிவில்லியர்ஸ் அசத்தல்
# தென்னாபிரிக்க அணி வெற்றி



டி வில்லியர்ஸ்,கலிஸின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி மூன்றாவது ஒரு நாள் போட்டியில் 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியது.

இதன் மூலம் தென்னாபிரிக்க அணி தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட், இரண்டு இருபது-20 மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலிய அணி 2:1 என்ற கணக்கிலும் இருபது-20 தொடரைத் தென்னாபிரிக்க அணி 2:0 என்ற கணக்கிலும் கைப்பற்றின.

தொடர்ந்து நடைபெற்ற முதல் இரண்டு ஒரு நாள் போட்டிகளிலும் இரு அணிகளும் தலா ஒன்றில் வெற்றி பெற்று தொடர் சமனிலையிலுள்ள நிலையில் 3ஆவது போட்டி நேற்று முன்தினம் கேப்டவுனில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி ஜக்கலிஸ்-டிவில்லியர்ஸின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 289 ஓட்டங்களை எடுத்தது.

இதில் டி வில்லியர்ஸ் 80 ஓட்டங்களையும் ஜக்கலிஸ் 70 ஓட்டங்களையும் டுமினி 29, ஆட்டமிழக்காமல் பௌச்சர் 28, கிப்ஸ் 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜோன்ஸன் 4 விக்கெட்டுக்களையும் பிரக்கன், ஜீவ்ஸ் ஆகியோர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 290 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 264 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் கோப்ஸ் ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களையும் பேர்க்குசன் 63 ஓட்டங்களையும் மைக்கல் கிளார்க் 35 ஓட்டங்களை யும் எடுத்தனர். பந்து வீச்சில் வான் டேர் மேர்வ் 3 விக்கெட்டுக்களையும் போத்தா, டுமினி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ்வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இப்போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு திருப்புமுனை அமைத்த ஜக்கலிஸ் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

## நிறம் மாறும் டெஸ்ட் கிரிக்கெட்

(இலண்டன்)

இருபது-20 கிரிக்கெட் போட்டிகள் வந்த பின்னர் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு ரசிகர்கள் பெருமளவு குறைந்து விட்டனர். ரசிகர்களை உற்சாகப்படுத்தி 3 மணி நேரத்தில் முடிவை எட்டும் இருபது-20 போட்டிகளுக்கு முன் டெஸ்ட் போட்டிகள் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

இதுபோதாது என்று டெஸ்ட் கிரிக்கெட்டின் பாரம்பரியத்தை சீர்குலைக்க புதிய பரிசோதனை முயற்சியில் இறங்கியுள்ளது இங்கிலாந்து கிரிக்கெட் சபை.

அடுத்த ஆண்டு பங்களாதேஷ் அணி இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் மோதவுள்ளது.

லோர்ட்சில் நடக்க உள்ள ஒரு போட்டியை இரவு நேரத்தில் நடத்த இங்கிலாந்து கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. இம்முயற்சி பாராட்டுக்குரியதுதான். இதோடு நின்று விடாமல் மற்றொரு அதிர்ச்சியையும் அளித்துள்ளது இங்கிலாந்து.

### உடை மாற்றம்

டெஸ்ட் கிரிக்கெட்டின் பாரம்பரிய உடையான வெள்ளை நிறத்தை மாற்றி வர்ணநிற ஆடைகளை அணிந்து விளையாட இத்தொடரில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தவிர சிவப்புநிற பந்துகளுக்குப் பதில் ஒரோஞ் நிறப் பந்துகள் பயன்படுத் தவும் ஆலோசித்து வருவதாக தெரி கிறது.

ஆடையை மாற்றுவதற்கு ஒட்டுமொத்த கிரிக்கெட் உலகமும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இது குறித்து ஓய்வு பெற்ற கிரிக்கெட் நடுவர் டிக்கி பேர்ட் கூறுகையில்,

டெஸ்ட் கிரிக்கெட்டின் பாரம்பரியமே வெள்ளை நிற உடைதான். இதை மாற்றினால் டெஸ்ட் கிரிக்கெட் அழிவுப் பாதையில் பயணிக்க ஆரம்பமாகும். சோதனை முயற்சிகள் நூற்றாண்டு புகழை அழித்து விடக்கூடாது.

தற்போது சரிவை எதிர் கொண்டுள்ள டெஸ்ட் கிரிக்கெட்டை முன்னேற்ற ஏதாவது வழி இருந் தால் அதனை செயல்படுத்துங்கள் என்றார்.

# வருகிறார்கள் வாரிசுகள்



தந்தையுடன் அர்ஜுன்

வாரிசு கலாசாரம் விளையாட்டு உலகிலும் உண்டு. சச்சின் மகன் அர்ஜுன், பெக்கம் மகன் புரூக்ளின் போன்றவர்கள் சாதனை வீரர்களாக வலம்வர காத்திருக்கின்றனர்.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் தனது 16 ஆவது வயதில் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமானார். சுமார் 20 ஆண்டுகளாக கிரிக் கெட் விளையாடி வரும் இவர் டெஸ்ட், ஒரு நாள் போட்டிகளில் அதிக ஓட்டங் கள், அதிக சதம் அடித்து சாதனை வீரராக ஒளிர்கிறார். இவரது வழி யில் மகன் அர்ஜுனும் புதிய அவதா ரம் எடுப்பார் என எதிர்பார்க்கப்படு கிறது.

சச்சினுக்கு 11 வயது இருக்கும் போது ராமாகாந்த் அச்ரேகரிடம் பயிற்சி பெற்றார். தற்போது அர்ஜுனுக்கும் 10 வயதாகிறது. தந்தை சச்சினிடம் அவ்வப்போது பயிற்சி பெற்று வருகிறார். இன்னும் சில ஆண்டுகளில் மும்பை அணிக்காக அறிமுகமாக வாய்ப்பு உள்ளது. இது குறித்து சச்சின் கூறியது,

இளம் வயதில் விளையாட ஆரம்பிக்கும் போது நிறைய இழக்க வேண்டியிருக்கும். உதாரணமாக நான் சிறுவனாக இருக்கும் போது எனது பெற்றோருடன் அதிக நேரம் செலவிட முடியாது. பெரும்பாலும் பயிற்சியில் தான் இருப்பேன். சர்வதேச கிரிக்கெட்டில் காலடி எடுத்து வைத்த போது குடும்பத்தை பிரிந்து அதிக நாட்கள் வெளிநாட்டில் தங்கும் நிலை ஏற்பட்டது.

போட்டிகளின் போது கடும் நெருக்கடிகளை சந்திப்பதால் குடும்பத்தையே மறந்து விடுவோம். இது கிரிக்கெட் வாழ்க்கையில் சகஜமானது.

ஓய்வு நேரம் கிடைக்கும் போது எனது மகன் அர்ஜுனுடன் பொழுதை கழிப்பேன். என்னை போல அவனுக்கும் கிரிக்கெட் மீது ஆர்வம் உண்டு. டிவியில் மல்யுத்த சாகசத்தை விரும்பிப் பார்ப்பான் என்னோடு பயிற்சி மேற்கொள்ளும் போது ஆட்ட நுணுக்கங்களை சொல்லி கொடுப்பேன்.

கிரிக்கெட்டை தேர்வு செய்யும்படி வற்புறுத்த மாட்டேன். விருப்பம் இருந்தால் தடுக்கவும் மாட்டேன். என்னால் முடிந்த அளவுக்கு அனைத்து உதவிகளையும் அளிப்பேன் என்றார். சச்சின் சொல்வதை வைத்து பார்க்கும் போது மிக விரைவில் அர்ஜுன் கிரிக்கெட்டில் களமிறங்குவார் என்பது தெளிவாகிறது.



புரூக்ளின்



பெக்கம்

### பெக்கம் மகன்

இதேபோல இங்கிலாந்து நட்சத்திரம் பெக்கம் மகன் புரூக்ளினும் கால்பந்து விளையாடுவதில் கெட்டிக்காரராக உள்ளார். சமீபத்தில் இத்தாலி சென்ற புரூக்ளின் அங்குள்ள பூங்காவில் கால்பந்து விளையாடினார். கைதேர்ந்த வீரரை போல இவர் ஆடியதை பார்த்த ரசிகர்கள் மெய்மறந்து போயினர். அடுத்த பெக்கம் தயாராகி விட்டார் என வாயார பாராட்டியுள்ளனர்.

இங்கிலாந்து கால்பந்து அணிக்காக பெக்கம் 109 போட்டிகளில் விளையாடி சாதனை படைத்துள்ளார். இவரை போல புரூக்ளினும் சாதிக்க வாய்ப்புள்ளது.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்...

(58)





இதனால் 1996ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரம்பமாகும் உலகக் கிண்ணத் தொடரில் முரளிதரன் விளையாடுவதற்கான அனுமதி கிடைக்குமா என பலரும் எதிர் பார்த்தனர்.

இதற்காக ஒரு மாத இடைவெளிக்குள் முரளிதரனின் பந்து வீச்சு முறையில் தவறில்லை என நிரூபிக்க இலங்கை கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்தது.

இதன் பிரகாரம் ஹொங்கொங் பல்கலைக்கழக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் தலை வராக இருந்த பேராசிரியர் ரவீந்திர குணதிலகவிடம் உடற்கூற்று ஆய்வை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

இம் முயற்சிக்கு பேராசிரியர் ரவீந்திர குணதிலகவும் முன் வந்தார்.


பாலா

இந்நிலையில் அவுஸ்திரேலிய முக்கோணத் தொடரிலிருந்து இடைவிலகிய முரளிதரன் ஹொங்கொங் பயணமானார்.

ஹொங் கொங் பல்கலைகழக பேராசிரியர் ரவீந்திர குணதிலகவினால் முரளிதரனின் பந்து வீச்சு முறை தொடர்பில் சட்டபூர்வ நடவடிக்கை எடுப்பதற்கான பரிசோதனை ஆரம்பமானது.

(பயணிக்கும்)

# எண் விளையாட்டு-61



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சம மாகவர வேண்டும். இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள்ளது. 1 முதல் 9 வரையான எண்களை பயன் படுத்த வேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்திய எண் திரும்பவரக் கூடாது.

### நேற்றைய பகுதிக்கான விடை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | 8 | 5 | 9 | 7 | | 3 | 2 | 4 | 1 |
| | 5 | 1 | 6 | 3 | | 9 | 8 | 7 | 2 |
| | | | 8 | 4 | 3 | | | 9 | 6 |
| | 9 | 8 | | | 9 | 6 | 7 | 8 | |
| | 7 | 4 | 5 | 2 | 8 | 1 | 3 | 6 | 9 |
| | | 3 | 2 | 1 | 7 | | | 1 | 2 |
| | 4 | 1 | | | 2 | 7 | 1 | | |
| | 9 | 7 | 8 | 3 | | 3 | 2 | 5 | 1 |
| | 8 | 2 | 3 | 1 | | 2 | 4 | 9 | 3 |

## ஐ.நா. செயலர் - ஜனா...

சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள மகிந்த ராஜபக்ஷவுடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு தொடர்பு கொண்ட பான் கீ மூன் வன்னியில் மோசமடைந்துவரும் நிலைமைகள் தொடர்பாக முக்கிய பேச்சுக்களை நடத்தியதாக ஐ.நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொதுமக்களின் இழப்புக்கள் அதிகரித்து வருவதால் போர் நிறுத்தம் செய்யப்படுவது அவசியம் என ஐ.நா. செயலாளர் நாயகம் முதலில் வலியுறுத்தியிருக்கின்றார்.

இருந்த போதிலும் கடந்த வாரம் வெளியிட்டிருந்த மற்றொரு அறிக்கையில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

தற்போது பெருந்தொகையான பொதுமக்கள் அடைக்கலம் புகுந்துள்ள பாதுகாப்பு வலயம் மீது படையினர் தாக்குதலை நடத்தலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே நேற்று முன்தினம் இரவு மகிந்தவுடன் அவசரமாகத் தொடர்பு கொண்ட ஐ.நா. செயலாளர் நாயகம் வன்னிநிலைமை தொடர்பாகப் பேசியுள்ளார்.

பாதுகாப்பு வலயத்தின் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டால் ஏற்படக் கூடிய ஆபத்தான நிலைமைகள் தொடர்பில் தனது அக்கறையை ஐ.நா. செயலாளர் நாயகம் இந்தப் பேச்சுக்களின் போது வெளிப்படுத்தினார்.

இதற்குப் பதிலளித்த மகிந்த, பொதுமக்களுடைய நிலைமை தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகம் கொண்டுள்ள அக்கறையை தன்னால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாக தெரிவித்தார்.

பொதுமக்களுடைய பாதுகாப்பையிட்டு அதிகளவு கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை இந்தப் பேச்சுக்களின் போது ஐ.நா. செயலாளர் நாயகம் வலியுறுத்தினார்.

(ச-3,5,14)

## பாதுகாப்பு...

வரக்கூடிய வழிகளை இனங்கண்டு மீட்புப் பகுதிகளை படையினர் உருவாக்கியிருப்பதாகக் கூறும் பாதுகாப்பு அமைச்சு, இவற்றுள் சில மோதல் தவிர்ப்பு பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் அமைத்துள்ள மண் அரண்களிலிருந்து சுமார் 150 மீற்றர் தூரத்தில் அமைந்திருப்பதாக்வும் குறிப்பிட்டுள்ளது.

பயங்கரவாதிகளின் தடைகளை அகற்றி மேலும் பல வழிகளை உருவாக்கியபடி விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு வருவதற்கான பாதுகாப்பான வழிகள் குறித்து படையினர் தொடர்ச்சியாக பொதுமக்களுக்கு அறிவித்த வண்ணமுள்ளனர் என பாதுகாப்பு அமைச்சு கூறுகின்றது.

பொதுமக்களுக்கு இந்த தகவல்களை வழங்குவதற்காக பாதுகாப்பு வலயங்களுக்கு மிக நெருக்கமான ஒலி பெருக்கிகள் பொருத்தப்பட்டுள்ளன என்று மேலும் அது கூறியுள்ளது. புலிகளின் பிடியிலிருந்து மக்களை மீட்கும் நோக்குடன் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல் நடவடிக்கைகளிலும் படையினர் ஈடுபட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

(ச-5,14)

## இன்றும்...

ஈடுபடுவதற்காக இன்று இரவு முழுவதும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருக்கும் என யாழ். ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சமரசிங்கவிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை இன்றிரவு கிறிஸ்தவ தேவாலயங்களில் திருவிழிப்பு வழிபாடுகள் இடம்பெறும் என யாழ்.ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை புது வருட தினத்தன்று இந்துக்கள் பூசை வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு வசதியாக 13,14ஆம் திகதிகளில் ஊரடங்குச் சட்டத்தை தளர்த்துமாறு இந்து அமைப்புகளின் ஒன்றியம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ச-5)

# உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள இருவரில் ஒருவரை ஐ.நாவுக்கு அழைத்துச் செல்ல முடிவு

## பிரித்தானிய அரசு அறிவிப்பு

பிரித்தானியாவில் சாகும் வரை உண்ணாநிலை போராட்டத்தை தொடங்கியிருப்பவர்களில் ஒருவரை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பிற்கு எதிர்வரும் புதன்கிழமை அழைத்துச் செல்ல பிரித்தானிய அரசாங்கம் ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 21 வயதுடைய சிவதர்சன் சிவகுமாரவேல், 28 வயதுடைய சுப்பிரமணியம் பரமேஸ்வரன் ஆகிய இளைஞர்கள் கடந்த 4 நாட்களுக்கு முதல் இந்தப் போராட்டத்தைத் தொடங்கியிருந்தனர்.

கடும் குளிருக்கு மத்தியிலும் பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கு முன்பாக உள்ள மைதானத்தில் இவர்கள் இருவரும் தமது போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர். இவர்களில் ஒருவரின் உடல் நிலை மிகவும் பாதிப்படைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில் கடந்த வியாழக்கிழமை மாலை உண்ணாநிலைப் போராட்ட மேடைக்கு வந்த மைக் டொனால்ட் என்ற பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர், உண்ணாநிலை போராட்டத்தில் இருப்பவர்களில் ஒருவரை அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்ல பிரித்தானிய அரசாங்கம் ஏற்பாடு செய்திருப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

அதன்படி எதிர்வரும் புதன்கிழமை அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்திற்கு அவரை அழைத்துச் சென்று வன்னியில் தமிழர்கள் படும் இன்னல்கள் குறித்து ஆராய பிரித்தானிய அரசாங்கம் ஏற்பாடு செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. அச் சந்திப்பிற்கான பிரித்தானிய அரசாங்கத்தின் அதிகாரபூர்வ எழுத்துப் படிவமும் பயண விபரமும் நேற்று பிற்பகல் தொடர்புபட்ட தரப்புகளிடம் கொடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது. சந்திப்பில் ஏழு உலக நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு இலங்கைப் பிரச்சினை குறித்து சிவதர்சன் சிவகுமாருடன் கலந்துரையாடவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் உண்ணாநிலைப் போராட்டம் இருக்கும் இருவரையும் பானம் அருந்தியவாறு உண்ணாநிலைப் போராட்டத்தை தொடருமாறும் பிரித்தானிய அரசாங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது. இந்த வேண்டுகோளை மேற்படி இருவரும் ஏற்று பானம் அருந்தியவாறு தொடர்ந்தும் தமது உண்ணாநிலைப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். (ச-5)

## கடும் மழையிலும் ஷெல்...

அம்பலவன் பொக்கணை பகுதியை நோக்கி முன்னேறுவதற்கான தயார்படுத்தலில் ஈடுபட்ட படையினர், கடும் மழையினால் பாதுகாப்பு ஏடுக்க முடியாத நிலையில் அல்லோலகல் லோலப்படும் மக்கள் மீது எறிகணை மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலை நடத்தியதாக கூறப்படுகிறது.

நேற்று அதிகாலை 4 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை நடத்தப்பட்ட தாக்குதலில் 292 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுடன் 350க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

கடும் மழையினால் பதுங்கு குழிகளுக்குள் நீர் நிரம்பியதால்அவற்றுக்குள் பாதுகாப்பு எடுக்க முடியாத நிலையில் மக்கள் பெரும் அவதிப்பட்டுள்ளனர்.

பள்ளமான பகுதிகளுக்குள் நீர் நிரம்பியதால் மேட்டு நிலங்களை நோக்கிச் செல்லும் மக்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படுவதாக பிரதேச தகவல்களை மேற்கோள்காட்டி இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை வடக்கில் பெய்யும் மழை காரணமாக போர்ப்பிரதேசத்தில் காயமடைந்து புதுமாத்தளன் வைத்தியசாலைக்குச் செல்கின்ற காயமடைந்தவர்களையும் ஏனைய நோயாளர்களையும் பொறுப்பேற்று சிகிச்சை அளிப்பதில் வைத்தியர்களும் ஊழியர்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம்இரவு காற்றுடன் தொடங்கிய மழை சிறிது நேர இடைவெளியின் பின்னர் தொடர்ச்சியாக பெய்துகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறிய பாடசாலைக் கட்டிடமொன்றில் செயற்பட்டு வருகின்ற புதுமாத்தளன் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு ஒரு மரத்திற்கு கீழ் நிலத்தில் கூரை விரிப்புக்களை விரித்து மர நிழலிலேயே செயற்பட்டு வந்ததாகவும் தற்போது பெய்யும் மழை காரணமாக மரத்தடியில் வெளிநோயாளர் பிரிவை செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் பெரும் எண்ணிக்கையில் காயமடைந்து இந்த வைத்தியசாலைக்குச் சென்றவர்களுக்கு முன் சிகிச்சை அளிப்பதற்கு போதிய இட வசதிகளின்றி வைத்தியர்களும் பணியாளர்களும் பெரும் கஷ்டம் அடைந்திருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன. (ச-5,14)

DMI குழுமம் விடுக்கும் முக்கிய அறிவித்தல்

A/L - 2011
கலை வர்த்தகப் பிரிவுகள்

பரீட்சை முடிவுகள் வரும்வரை பொறுத்திருந்த மாணவர்களே!

எமது நிர்வாகத்திற்கு 2ஆம் பிரிவு ஆரம்பிப்பதற்கு, ஆசிரியர்களின் நேர அட்டவணைகளைத் தயாரிப்பதற்காகவும் வகுப்பறை ஒழுங்குகள் செய்வதற்காகவும் சிறிது காலம் தேவைப்படுகின்றது.

ஆகவே எமக்கு ஒத்துளைத்து 18 ஏப்பிரல் வரை பொறுத்திருங்கள்.

லாவண்யா
பல், மூக்குக்கண்ணாடி அகம்

552, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை
யாழ் வீதி, நெல்லியடி
(பொலிஸ் நிலையம் முன்பாக)

வடமராட்சி வாடிக்கையாளரின் நலன் கருதி எமது நெல்லியடி கிளை தினமும் திறக்கப்பட உள்ளது. மேலும் மூக்குக் கண்ணாடிகள், செயற்கைப் பற்கள், மிதப்பு பற்களுக்கான நிரந்தர கிளிப் அனைத்து விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன.

நெல்லியடியில் பார்வையிடும் நேரம்: காலை 9 - 2 மணிவரை

உரிமையாளர்
DR.றெஜி சொலமன்

T.P. வீடு: 222 5569, கடை: 222 9053






மலரப்போகும் புத்தாண்டிற்கு... மனங்கவர் ஆடைகளை...
மலிவு விலையில்
அள்ளிக் கொள்ள
மாபெரும் மலிவு விற்பனை!
லிட்டில் இந்தியன் பெஷன்
77, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
(C-2279)



யாழ் மாவட்ட மின்பாவனையாளர்களே!

சிந்தியுங்கள்! நன்றாக சிந்தியுங்கள்!! உங்கள் பிள்ளைகளின் கல்வி மின்வெட்டினால் பாதிப்படைவதை சிந்தியுங்கள்!!!

ஒவ்வொரு மின்பாவனையாளர்களும் 80% மின்சக்தியை சேமிக்கக்கூடிய ஒரு CFL மின்குமிழையாவது பயன்படுத்தி (400/=செலவு செய்து) பல ஆண்டுகால மாக நீடித்த மின்வெட்டை புதுவருடப்பிறப்புக்குள் இல்லாது செய்யுங்கள்.

குறிப்பு:- அரசநிறுவனங்கள்,வங்கிகள், பாடசாலைகள், அரசசார்பற்ற நிறுவனங்களுக்குஅதிகூடிய கழிவு விலையில் 20 மாத உத்தரவாதத்துடன் மானிப்பாயில் உள்ள சுந்தர்சன் நிறுவனத்தில் CFL மின்குமிழ்களை 1மாத கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ளலாம். 56/15, ஸ்ரான்லி வீதியில் உள்ள NEW ASIAN CENTER ல் பெற்றுக்கொள்ளலாம்.

நிர்வாகி: Jaffna Technical Institute
45, Clock Tower Road, Jaffna.
021 222 6434, 0718561654

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.04.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.